திராவிடநாடு

5-8-62 வாரவெளியீடு இதழ் 16

# "அடிமை ஏனோ....?"

—[ கலைக்கூத்தன் ]—

சிந்தனைக்கு விருந்தளிக்க இயற்கை உண்டு
சிந்துபாடித் துள்ளிவரும் நதிகள் உண்டு
மண்ணுக்குள் தங்கம்வெள்ளி புதைந்திருக்கு
விண்ணோடு மழைமேகம் களித்திருக்கு
கடலுக்குள் முத்திருக்கு மீன்கள் கூட்டம்
உடலுக்குள் எழிலையெலாம் சேர்த்துக் காட்டும்
அடிக்குஅடி அழகிருக்கு மகிழ்விக்கும் நம்மை
நொடிக்குநொடி கற்பனைக்குள் மூழ்க வைக்கும்
இரும்புருக்கு நிலக்கரியும் நீருக்கு மக்கள்
விருப்புகின்ற படிவாழ வளம் இருக்கு
உலகுக்கே வழிகாட்டக் குறளும் அதன்
அழகுக்கே முடிசூட்டத் தமிழும்! வீரம்
தலைதூக்கி நிற்கிறது! சரித்திரம்தான்
நிலைநாட்டத் தி. மு. க. திகழ்வதைக் காண்!
கொல்லைக்குள் முல்லைமணம் கமழும் தெற்கு
எல்லைக்குள் இருப்பதெலாம் நமக்காகத் தான்
கோடிவளம் திராவிடத்தில் இருந்தும் உயிர்
நாடியில்லை! வடவருக்கு அடிமை ஏனோ?

# கவிஞனும் கர்வமும்

தமிழ்ப் புலமையில் வல்லவராயினும் ஆணவம் மிக்கவர். தன்னை யாரும் மிஞ்சக்கூடாது என்ற எண்ணம் உடையவர். சாதாரண புலவர்களாக இருந்தால் கேள்விமேல் கேள்விகேட்டு, அவர்தம் பாடல்களில் குற்றம் கண்டு இழிவுபடுத்தும் தன்மை உடையவர். தனக்கு ஒருவனுக்குத்தான் கவி பாடத்தெரியும், மற்றவர் இளித்த வாயர்கள் என்ற இழிந்த பண்புடையவர். நல்லவர்களும் வல்லவர்களும் அவரைக் கண்டால் ஒதுங்கி விடுவதுமுண்டு. சோழநாடு முழுவதும் அவர் செருக்குடையவர் என்ற செய்தி தெரியாதவர்களே கிடையாது எனலாம்.

மதுரையில், பாண்டியன் அவைக் களம் சென்று, புலவர்களைக் கண்டு, தம் புலமையை வெளிப்படுத்தி மதுரைப் புலவர்களை அவமானப் படுத்த வேண்டுமென்று விழைந்தார்.

புலவர்கள் ஒன்றுபட்டு வாழும் இடம் மதுரை. பெருந்தன்மையே உருவாக இருப்பவர்கள் அவர்கள். எனவே சோழநாட்டுப் புலவரை வரவேற்பதில் உவகை இருப்பதும் இயல்பு தானே. புலவரை இனிய முகத்துடன் வரவேற்று, உபசரித்து, சோழ நாட்டுச் செய்திகளைக் கேட்டு அறிந்துகொண்டார்கள்.

சோழப் புலவர் தாம் இருப்பது மதுரை, அதுவும் புலவர் குழாம் என்பதை மறந்து சோழ நாட்டின் சிறப்பினையும் சோழனது பெருமைகளையும் பற்றிப் பேசாது, மாறாகத் தாம் பல இடங்களுக்குச் சென்று கவிதைப் பாடி, பிற புலவர்களை அடக்கி வென்றுவந்த வீரப் பிரதாபங்களைக் கொட்டி அளந்துகொண்டே இருந்தார். அவரது பேச்சில் அகங்காரம் தொனித்ததை மதுரைப் புலவர்கள் கண்டார்கள்.

மதுரைப் புலவர் குழாம் தலைவருக்கு இவரை எப்படியாவது தலை குனிய வைத்து இவரது செருக்கை ஒழித்துக் கட்டவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

எனவே தலைமைப் புலவர் இவரைப் பார்த்து 'புலவரே உங்கள் சோழ மன்னனுடைய புகழை வைத்து ஒரு கவி பாடுங்கள்' என்றார்.

சோழநாட்டுப் புலவர் 'ஆகா இவர்களை முறியடிக்கத் தக்க தருணம் வாய்த்துவிட்டது' என்று மனதிற்கொண்டு சோழனது வீரத்தைப் பற்றி சோழன் புறமுதுகு காட்டா மாவீரன்; எனவே அவன் முதுகிற்குக் கவசம் அணிவதில்லை; யாருக்கும் புறமுதுகிடா அவனுக்குக் கவசம் எதற்கு: பாட்டின் முதல் இரண்டடியைச் சொன்னார்.

வென்றி வளவன் விறல் வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகுக் கிடான் கவசம்

பின்வரும் இரண்டடியில் இதற்குரிய காரணத்தைச் சொல்லலாம் என நினைத்திருந்தார். இந்த இரண்டடியைச் சொன்னவுடன். மதுரைப் புலவர் குழுத் தலைவர் "புலவரே நிறுத்தும், இந்த வெண்பா யாருடைய புகழைச் சொல்வது."

"ஏன், இது எங்கள் சோழ மன்னனது புகழைத்தான் சொல்கிறது. அவன் புறமுதுகிடாத மாவீரன் என்பதைத்தான் விளக்குகிறது. இதுகூடத் தெரியவில்லையே" என நகைத்தார்.

"இந்த இரண்டடியில் உங்கள் சோழன் முதுகுக்குக் கவசம் இடுவதில்லை என்பதுதானே இருக்கிறது"

"ஆமாம்! இந்த இரண்டடியிலிருந்து சோழ மன்னன் புறமுதுகு காட்டாத வீரன் என்று அறியலாமே. பாட்டு முழுவதும் முடியு முன்பே இந்தப் பொருள் புலப்படுகிறதே."

"கிடையவே கிடையாது, இந்த இரண்டடியில் சோழனது புகழ் வெளிப்படவேயில்லை. மாறாகச் சோழனுக்கு இகழ்ச்சியாகக்கூடப் பாட்டை முடிக்கலாம்."

உடனே சோழநாட்டுப் புலவருக்குக் கோபம் வந்துவிட்டது. "பாட்டில் வெளிப்படையாகச் சோழனது பெருமை புலப்படுகின்றது. தெரிந்தும் அறியாமல் பேசுகிறீர்கள்."

"தாங்கள் பாடிய இதே இரண்டடியை வைத்துக்கொண்டு உங்களது சோழ மன்னனை இகழ்ந்தும் எங்கள் பாண்டிய மன்னனைப் புகழ்ந்தும், பின் இரண்டடிகள் சேர்த்துப் பாடலாம்."

சோழப் புலவர் சினங்கொண்டு "எங்கே பாடுங்கள் பார்க்கலாம்" என்று ஆத்திரத்தோடு கூற,

பாண்டிய புலவன் குழுத தலைவர்,

வென்றி வளவன் விறல் வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகுக் கிடான் கவசம்—துன்றும்
வெறியார் தொடை கமழும் மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங் கொடுக்கின்.

என்று "சோழன் முதுகுக்குக் கவசம் அணியாதது புறங்காட்டாத இயல்பு அன்று. சோழனோடு போர் புரியும் ஆற்றல் பாண்டியனுக்குத்தான் உண்டு. பாண்டியனோடு சோழன் போர் செய்தால், சோழன் புறமுதுகிட்டோடுவான். அப்படி புறமுதுகிட்டோடும் சோழனை, பாண்டியன் தன்னுடைய வேலை அவன் முதுகில் எறியமாட்டான். அவ்வளவு பெருந்தன்மையும் பெருவீரமும் கொண்டவன் பாண்டியன். முதுகில் பாண்டியன் வேலை எறியமாட்டான் என்ற உறுதி இருக்கும் போழ்து சோழ மன்னன் பயப்பட வேண்டியதில்லை. அதனால் தான் சோழ மன்னன் முதுகுக்குக் கவசம் அணிவதில்லை!" இப்படியெல்லாம் பொருள்படப் பாடினார்.

பாவம் சோழக் கவிஞர் வாயடைத்து, எந்தப் பாட்டுச் சோழனது வீரத்தை வெளிப்படுத்தும் என நினைத்தாரோ, அதையே வைத்து அவனுடைய இழிவையும், பாண்டியனது உயர்வையும் காட்டும்படி பாடிய பெருமை கண்டு செருக்கொழிந்து தெளிவு பெற்றார். ●

நெல்லை—கவுதமன்

# சமநல சமுதாயம்

மலர் 20 ] ஆண்டு சந்தா ரூ. 8 (5—8—62) தனிப்பிரதி 16 காசு [ இதழ் 45, 46, 47, 48, 49

"அரசாங்க உபகாரச் சம்பளத்துக்கு மனுச் செய்துகொள்ளும் மாணவர்களின் பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ. 1500 என்று உயர்த்தும் உத்தேசம் உண்டா?"

"இல்லை"

"சம்பளக்கமிசன் சிபாரிசுப்படி சம்பளம் இப்போது என். ஜி. ஓ.—க்களுக்கு உயர்வதால் இந்த வரம்பினை உயர்த்தி அவர்களுக்கு உதவும் உத்தேசம் உண்டா?"

"சமநல (சோஷலிச) சமுதாயத்தில் ஒவ்வொரு வரும், அதிக வருமானம் வரும்போது கொஞ்சம் இப்படி யெல்லாம் கொடுத்துத்தானாகவேண்டும்"

இந்தக் கேள்வி பதிலை மேல்நோக்காகப் பார்க்கும் போது, அடடா பதில் சொன்னவர்கள் இந்த நாட்டில் சோஷலிச சமுதாயம் அமையவேண்டும் என்பதில் தீவிரமான ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கிறார்கள்? வெறும் 1500 ரூபாய் ஆண்டு வருமானம் உள்ளவர் களே சோஷலிச சமுதாய அமைப்புக்குக் கணிசமான அளவு கொடுத்துதவ முன்வரவேண்டுமென்று ஒரு தரத்தார் கூறுகின்றார்கள் என்றால், அவர்கள் இந்த 1500 ரூபாய் ஆண்டு வருமானத்துக்கும் அதிகமாகப் பெறுவோர்களிடம் எவ்வளவு தூரம்—அவர்கள் தாம் விரும்பும் — சோஷலிச சமுதாய அமைப்புக்கெனப் பெற முயன்றுகொண்டு வருவார்கள்! இதுவன்றோ உண்மையான சமதர்மநோக்கு! இதுவன்றோ ஏற்றத் தாழ்வுகளையெல்லால் விரட்டியோட்டுகின்ற உண்மை யானசமநலப்போக்கு என்றுதான் எண்ணத்தோன்றும்.

ஆனால், இந்த 1500 ரூபாய் ஆண்டு வருமானம் என்று சொல்லப்பட்டதை மாத வருமானமாக்கிப் பார்க்கும்போது, அதன் அளவு சற்றே தெரியும். பின் னும் அந்த மாத வருமானம் எத்தனை உயிர்களின் காப்புக்குப் பயன்பட்டு வருகிறது என்று பார்க்கும் போது — அதாவது ஆண்டு வருமானம் எனப்படும் போது 1500 ரூபாய் என்று வருவது மாத வருமானம் என்று வரும்போது ரூ. 125 என்று ஆவதும், அந்த ரூ. 125ஐ சராசரிக் குடும்பம் ஒன்று,—உழைப்பவர், அவர்தம் வாழ்க்கைத் துணைவி, குறைந்தபட்சக் குழந்தைகள் இருவர், தாயோ, தந்தையோ, மாமனோ, மாமியோ, அல்லது உடன்பிறப்பாக ஒன்றோ இப்படிச் சராசரி ஐந்து பேர் அடங்கிய குடும்பம் ஒன்று—முப்பது நாட்கள் வைத்துக்கொண்டு உணவுக்கான செலவு, உடைக்கான செலவு, உறையுளுக்கு வாடகை—இத் தரத்தார் பெரும்பாலும் வாடகை வீட்டிலேயே குடியிருக் கின்றனர் என்பது யாவரும் அறிந்த உண்மை—இவ் வளவோடு எதிர்பாராதவிதமாக வந்து வந்து முளைக்கும் செலவுகளையெல்லாம் சமாளித்துப் பிள்ளைகள் படிக்கப் படிப்புச் செலவு செய்யவேண்டும், புத்தகங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்பனவற்றையெல்லாம் ஊன்றிப் பார்த்தாலே போதும். நியாய உணர்வுள்ள யாருக்கும் தலை சுற்றாமலிருக்காது. அதே நிலையோடு நாளும் நாளும் விடம்போல் ஏறிக்கொண்டு வரும் விலைவாசியை யும் மனதிற்கொண்டுவிட்டாலோ......! அந்த நிலையை விவரிக்கவே முடியாது!

இப்படிப்பட்டதொரு நிலைமையினை ஒருபுறம் உரு வாக்கிவிட்டிருப்பவர்கள்தான் மேலே கண்டபடி நம் கழக சட்டமன்ற உறுப்பினர் எழுப்பிய வினாக்களுக்கு, சோஷலிச சமுதாய பாணியில் மறுமொழிகள் அளித் திருக்கிறார்கள்.

இன்று இந்த நாட்டில் உண்மையான சோஷலிச சமுதாயம் அமையப்பெற வேண்டுமென்றால், அதற்கு எவ்வகை முறையினைக் கையாளவேண்டும் என்பது பற்றி இந்த நாட்டில் ஆறறிவு பெற்ற மாந்தர் அனைவர் மாட்டும் இருவகைத்தான உள்ளக் கிடக்கை இருப்ப தற்கு வழியே கிடையாது. வெள்ளிடைமலை என அந்த முறை, அதற்கான வழி யாவருக்கும் விளங்கக் கூடியதேயாகும். எனினும் சிலர் சமுதாயத்தில் தாழ்ந்து கிடப்போரிடம் மட்டும் சோஷலிசம் பேசுகிறார்கள் என்றால், அது அவர்களின் சொந்த வாழ்வு நலனை முன்னிட்ட பேச்சாகும். இதைப் புரிந்துகொள்ளத் தனியறிவு யாருக்கும் வேண்டுவதில்லை.

"பத்து இலட்சம் முதலீடு போட்டுப் பஞ்சாலைகளி லிருந்து தொடங்கப்பட்ட ஓராண்டுக்குள் இலாபமாக மட்டும் 15-இலட்சம், 20-இலட்சம் பெறுகிறார்களே, இந்தப் பணமெல்லாம் எங்கே போகிறது? வறுமைப் பள் ளத்தாக்குகள் மலிந்துகிடக்கும் இந்த நாட்டில் அப்படிப் பட்ட செல்வச் சிகரங்கள் இருப்பானேன்?"

இந்த வினாக்களுக்கு கோலேந்தி நிற்போர், ஏழை களைப் பார்க்கும்போது, அவர்களைப் பற்றிய பேச்சு எழும்போது மட்டும் சோஷலிசம் பேசுவோர் பதில் தரவில்லை.

ஏன் அவர்கள் தக்க பதில்கள் தரவில்லையென்பதை நாட்டு மக்கள் தமக்குத்தாமே கேள்வியாக இந்நாள் எழுப்பத் தொடங்கி விட்டனர்; எழுப்பிக்கொண்டிருக் கின்றனர்.

ஒருநாள் இந்த நாட்டு மக்கள் உள்ளங்களில் எல் லாம் இந்தக் கேள்விகளுக்கான மறுமொழி—ஒருமிக்க —முளைக்கத்தான்போகிறது!

முளைக்கும் அந்த மறுமொழி கிளர்ந்து எழுந்து உயர்க என்று யாம் கூறத் துணிவதற்குமுன்,—கூறத் துணிவதனினும்-அந்தக் கிளர்ந்துயரும் நிலை வருதற்கு முன் நிலை திருந்தி வருக இந்த நாட்டின் அரசுக்கட்டி லில் ஏறியிருப்போர் என்று கேட்க விரும்புகிறோம்.

# நீயேற்றதே தொண்டு

★ கனகு ★

அமைதிபெறும் நிலை அப்போதைக் கில்லை. உள்ளப் படபடக்கது பரபரத்தது. ஐயையை எண்ணினாலே ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. உள்ளப் பரபரப்பையும் படபடப்பையும் ஆற்றிக்கொள்ள மனத்தை ஒரு நிலைப்படுத்த, அப்போதைக்கு ஏதாவதொன்றைப் பற்றி எழுதுவதைத் தவிர, வேறு வழி தோன்றவில்லை, தென்படவில்லை எனக்கு.

கை எழுதுகோலை எடுத்தது. எழுதினேன். எழுதிக்கொண்டே போனேன். ஊர்தியோட்டியின் முடிவையே முடிந்த முடிவாக வைத்து ஐயையை ஆங்காங்கே காட்டித் துன்ப ஓவியம் ஒன்று தீட்டினேன். அந்த ஓவியத்தை முடிக்க எனக்குக் கற்பனையொன்றும் தேவைப்படவில்லை. கண்ணால் கண்டதை, காதாற் கேட்டதை அப்படியே வரைந்துகொண்டு போனேன். ஆங்காங்கே ஊர்தியோட்டியின் சொற்களையே ஆண்டுகொண்டு போனேன். அந்தச் சொற்களைத் தவிர வேறு பொருத்தமான சொற்கள் குறித்தவற்றைக் குறித்தவாறு குறித்துக் காட்டக் கிடைக்கமுடியாது என்ற முடிவோடு முனைந்து எழுதினேன். முடித்தேன்.

எழுதியதை ஒருமுறை படித்துப் பார்த்தேன். எனக்கே வியப்பாக இருந்தது. அப்படி மளமளவென்று எந்தக் கதையையும் எடுத்த எடுப்பில் எழுதி முடித்தது கிடையாது நான். அங்கே ஆளப்பட்டிருந்த சொற்களும் எனக்குப் புதியனவாகத் தென்பட்டன. புதியனவெனினும் அவையே பொருத்தமானவை என்ற எண்ணந்தான் அப்போதும் மேலோங்கி நின்றது.

இப்போது உயிரோடு, உடலோடு இரக்கத்துக்குரியோனாகவோ, பரிதாபத்துக் காட்பட்டோனாகவோ கழுகுமலை என் கண் முன்னால் நிற்கவில்லை. அவ்வாறேதான் கொடுமைக்கு இலக்கணமாய், நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டவளாக என்னால் சித்தரிக்கப்பட்டு, அந்தச் சித்தரிப்பை வெற்றியாக்கிய ஐயை தன் உயிரோடு, உடலோடு என் மனக்கண்ணில் அங்கே தென்படவில்லை. கழுகுமலைமீது பொங்கி வழிந்த என் இரக்க உணர்வு எங்கோ, எவ்வாறோ என்னிடமிருந்து மறைந்துபோயிருந்தது. ஐயைமீது நான் கொண்டிருந்த ஆத்திர உணர்வும் என்னையறியாமல் எங்கோ அடங்கி, ஒடுங்கிப்போய் முடங்கிக்கிடந்தது. இப்போது என் உள்ளத்தை ஆட்படுத்திக்கொண்டிருந்ததெல்லாம், கவர்ந்திழுத்துக்கொண்டிருந்ததெல்லாம் என்னை மறந்த நிலையில் என்னை யாக்கப்பட்டிருக்கும் அந்த எழுத்தாக்கந்தான். அந்த எழுத்தாக்கம் என் உள்ளத்தில் ஏற்றிய நிறைவு, அது அறிவுறுத்திக்காட்டிய வெற்றி என்னை மயக்கத்தில் ஆழ்த்தியது. ஆமாம் நிறைவு மயக்கம். வெற்றி மயக்கம்.—மூழ்கிக்கிடந்தேன் நான். என் எழுத்தாக்க வெற்றி முன், என் எழுத்தாக்க நிறைவின் முன் கழுகுமலையும் ஐயையும் எந்தச் சிறப்பும் இல்லாதவர்களாகவே, எந்த உணர்வையும் ஊட்டத்தக்க வலிமையில்லாதவர்களாகவே இருந்தனர். வெற்றுப் பொருள்களாகவே நின்றனர். ஆமாம் சில நாழிகைக்கு முன்னே என் உள்ளத்தையும் ஊர்தியோட்டியின் உள்ளத்தையும் ஒருசேர உணர்ச்சிப் பிழம்பாக்கிய இருவர்—தவிக்கவும், அலமந்து நிற்கவும் முன்னிலையாகி நின்ற இருவர் இப்போது — என் எழுத்தாக்கத்துக்கு முன்—ஏதுமற்றோராக நின்றனர். ஊர்தியோட்டியின் நிலையும் என்னதைப்போன்றுதான் மாறியிருக்குமா? இருக்காது? அவர் நிலை மாறியிருக்காது. அது மாறுதற்கு வழி கிடையாது அங்கே!

ஆமாம், என் உணர்ச்சியையும், உள்ளப் புழுக்கத்தையும், பேரிரக்கத்தையும், எல்லாவற்றிற்கும் மேலாக ஆத்திரத்தையும் எழுத்தாக்கமாக்கி, உணர்ச்சிக் காவியமாக்கித் தீர்த்துக்கொண்டுவிட்டேன். இதுபற்றித்தான் சொல்கிறார்களோ, கலைவல்லாரின் உணர்ச்சியும், ஆத்திரமும் இரக்க உணர்வும் முதலில் எதையும்விட மிஞ்சி நிற்கும்; அவற்றை அவர்கள் மேற்கொண்ட கலைமூலம் முற்ற முற்றக் காட்டித் தீர்ப்பர்; பிறகு எல்லாம் அடங்கிவிடும்; அவர்களும் ஓய்ந்துவிடுவர் என்று?

நான் எழுதிய மூச்சில் என் எழுத்தாக்கத்தை வெளியீட்டகத்திற்கு அனுப்பிவைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்த்தேன். இதோ என்னையறியாமல் ஒரு திங்கள் கடந்துவிட்டது. இப்போதுதான் திரும்பவும் கழுகுமலையை நினைத்துப் பார்க்கிறேன். ஐயை என் நினைவுக்கு வருகிறாள். திரும்பவும் அந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் என் மனக்கண்ணில் வந்து நிற்கிறது. இப்போது ஒருவகை அச்சம். ஐயையைப்பற்றி நான் எழுதியவை எனக்குத் துன்பம் விளைக்குமோ என்ற அச்சம்.

ஆமாம், குற்றம் செய்யாத ஒருவரைப்பற்றி ஒன்றைச் சொல்லிவிடலாம். சொல்லிவிட்டு அஞ்சுதலின்றி உலவலாம். ஏனெனில் குற்றம் செய்யாதவரின் காம் கொடுங்கரமல்ல. அது எதையும் பொறுக்கும் உள்ளத்தின் வழி இயங்கும் காம். ஆனால் குற்றம் செய்த ஒருவரின் குற்றத்தைச் சுட்டிக் காட்டிவிட்டு அஞ்சுதலின்றி நிம்மதியோடு உலவுதல் என்பது எளிதான காரியம் அல்ல என்பதைவிட, முடியாத காரியம் என்பதே முற்ற முற்றப் பொருந்தும். எனவே,

ஐயை குற்றமற்றவளல்லள். அவள் புரிந்ததோ குற்றம். அதை உலகறியச் சொல்லிவிட்டதோ நான். குற்றம் புரிந்த உள்ளத்தால் இயக்கப்படவிருக்கும் அந்தக் கொடுங்கரம். அந்தக் குற்றத்தைச் சுட்டிக்காட்டிவிட்ட என்னை என்னென்ன அலைக்கழிப்புக்குள்ளாக்க நினைத்துக்கொண்டிருக்கின்றதோ!

இப்போது என் உள்ளத்தில் வேதனை பெருகிற்று. எதை எதையோ கற்பனை செய்துபார்த்துக்கொண்டு, அந்தக் கற்பனைக் கொடுமைக்கு என்னை நானே உள்ளாக்கிக்கொண்டு துயரத்தில் மூழ்கிவிட்டேன். மூழ்கிக்கிடந்தேன். அவ்வேளை,

'வணக்கம்!' என்ற ஒலி எழுந்து என் காதுகளில் வந்து மோதிற்று.

(13-ம் பக்கம் பார்க்க)

# "தேசிய ஒருமைப்பாடு"

**'தேசிய ஒருமைப்பாடு' என்ற தலைப்பில் சட்ட மன்றத்தில் நடைபெற்ற உரையாடலின் போது சி. என். ஏ. அவர்கள் அளித்த விளக்கத்தை இங்கு தந்துள்ளோம்.**

நாடு எங்கிலும் பேசப்பட்டு வருகிற "தேசிய ஒருமைப்பாடு" என்கின்ற பிரச்னையாகக்கூடிய ஒரு மாநாட்டின் நடவடிக்கைகளைப்பற்றிய குறிப்பேட்டின் பேரில், ஒரு விவாதத்தை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள். நடைபெற்ற மாநாட்டிலே பல்வேறு கட்சிகள் அழைக்கப்பட்ட போதிலும், நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கட்சி அழைக்கப்படவில்லை என்பதைப் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டுக் காட்டினர். ஆனால் நான் அதை ஒரு குறையாக எடுத்துக்கொள்ளவில்லை என்பதை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், தேசிய ஒருமைப்பாடு மாநாடு என்று அவர்கள் கூட்ட ஆரம்பித்தது, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தின்படி பார்த்தால், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் நடவடிக்கையின் தொடர்ச்சியாக, மூன்றாவது கட்டமாக, அது நடைபெற்றிருக்கிறது. நாட்டிலே இருக்கிற ஒரு ஆளும் கட்சியின் நடவடிக்கைகளிலே இது ஒரு தனியான கட்டமாக அமைந்திருப்பதால், அதிலே நாங்கள் அழைக்கப்படாததைப் பற்றி, உள்ளபடியே வருத்தப்படத் தேவையில்லை. ஆனால், 'தேசிய ஒருமைப்பாடு' என்று எடுத்துச்சொல்லப்பட்டு வந்ததை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே 'தேசிய இணைப்பு' என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். வார்த்தைக்கு வார்த்தை நான் பொருள் பிரித்துப் பார்க்கிறேன் என்று யாரும் என் பேரில் வருத்தப்பட்டுக் கொள்ள வேண்டாம். 'ஒருமைப்பாடு' என்பதற்கும் 'இணைப்பு' என்பதற்கும் அடிப்படையிலே வித்தியாசம் இருக்கிறது. 'இணைப்பு' என்பது—தனித்தனி உருவங்களைப் படைத்த பலவேறு உருவங்களை ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக இணைத்து வைப்பது இணைப்பாகும். 'ஒருமைப்பாடு' என்பது — தனித்தனியாக இருக்கிற உருவங்களாக இருந்தாலுங்கூட, அவைகளையெல்லாம் ஒன்றுகூட்டி ஒரு ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது ஒருமைப்பாட்டின் பால் சேர்ந்ததாகும்.

'இந்த மாநாட்டை நடத்தியவர்கள் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க விரும்பினார்கள்' என்று ஏடுகளெல்லாம் எழுதின. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 'இது தேசிய இணைப்பு' என்றார்கள். 'இண்டிக்ரேஷன்' என்பதற்கு அகராதியில் தரப்பட்டிருக்கிற பொருள் — 'துண்டுபட்டிருக்கின்ற பொருள்களை ஒரு பொருளாகக் குவிப்பது அல்லது சேர்ப்பது' என்பதாகும். ஆகவே, இந்த மாநாட்டை நடத்தியவர்கள் 'இண்டிக்ரேஷன்' என்பதற்கான நல்ல விளக்கத்தையும், அதற்கும் முன்னாலே 'நேஷனல்' என்பதற்கான விளக்கத்தையும், எது 'நேஷன்' என்பதற்கான இலக்கணங்களையும், இந்தியாவில் உள்ளவர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள், அல்லது ஒரே நேஷனைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான ஆதாரங்களையும் விரிவாகக் கொடுத்திருப்பார்களானால் விவாதம் கட்சிஅரசியலுக்கு மட்டும் பயன்படாமல் இன்னும் சற்று உயிருள்ளதாக அமைந்திருக்கும். அதற்கு நம்முடைய துரைத்தனத்தார் தந்திருக்கிற இந்த ஏட்டோடுகூட, அதிலே கலந்து கொண்டவர்கள் அங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் அவர்கள் தொகுத்துக் கொடுத்திருப்பார்களானால் அவரவர்கள் உள்ளத்தில் தேசிய ஒருமைப்பாடு என்பது என்ன என்ன வகையிலே வடிவம் எடுத்தது என்பதை நாம் ஓரளவு தெரிந்துகொண்டிருக்கலாம். அதை அவர்கள் செய்யத் தவறிவிட்டார்கள்.

ஆனால் நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற இந்த அறிக்கையிலே பார்க்கின்ற நேரத்திலே, இதில் முதல் இரண்டரைப் பக்கங்களில், இந்தியா என்பது பல்வேறு வகையான இனங்களையும், பல்வேறு வகையான மொழிகளைப் பேசுகின்ற மக்களையும் கொண்ட ஒரு முரண்பாடு நிறைந்த இடம் என்றாலும், அந்த முரண்பாட்டுக்கிடையே ஒரு ஒருமைப்பாட்டை ஏற்படுத்த நெடுங்காலமாக இந்த நாட்டிலே முயற்சி செய்து பலர் அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு இந்தியத் துணைக்கண்டத்தினுடைய குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் தம்முடைய அரிய உரையில் ஆதாரமாகக் காட்டியிருப்பதாவது: 'If you look into the Mahabharata, you will find there that almost all the representatives from the north and the extreme south are said to have been present at the Kurukshetra war.' அரசியல் பிரச்சினைகளை விவாதிக்கின்ற நேரத்தில் பாரதக் கதையை ஆராயலாமா என்று கேட்டால், டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடாமல் இருந்திருப்பாரானால் நானும் அதைக் குறிப்பிடத் தயக்கப்பட்டிருப்பேன். ஆனால், டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களே இதை ஒரு அரசியல் பிரச்சினைக்கு ஆதாரம் அளிக்கக்கூடியது என்று எடுத்திருக்கிறார். நான் உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்வேன். இதிலே குறிப்பிட்டிருப்பதில் Extreme South என்று இருக்கிறது. அங்கே வந்திருந்தவர்கள் தென் கோடியிலேயிருந்து வந்திருந்தவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்களே என்று நான் நம்முடைய சங்க இலக்கியங்களைப் பார்த்தேன். அப்படிப் பார்க்கிற நேரத்தில், அவர்கள் பாரதப் போரில் எந்தப் பக்கத்திலேயும் சேராமல சண

டையில் ஈடுபட்ட இருவருக்கும் சோறு அளித்தார்கள் என்று நம்முடைய சங்க இலக்கியம் சொல்கிறது. அதிலே 'குருக்ஷேத்திரம்' என்ற அபாயகரமான வார்த்தையை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் உபயோகப்படுத்தியதிலேயிருந்து, பாரத காலம் முதற்கொண்டு அடிதடிச் சண்டை நடந்துகொண்டு வந்தது என்பது அதிலே ஆதாரமாக இருப்பதுதான் என்னைப் போன்றவர்களுக்குத் தெரிகிறது.

ஆனல், பலர் இந்தியத் துணைக்கண்டத்தை ஒன்ருக இணைக்க முயற்சி எடுத்துக்கொண்டார்கள்: "unity in diversity" முரண்பாடுகளுக்கிடையே ஒருமைப்பாட்டைக் காண விரும்பினர்கள் என்று குறிப்பிட்டிருப்பது அத்தனையும் எங்கெந்த நேரத்தில் எங்கெந்தப் பகுதியில் உள்ளவர்கள் வலிவு பெற்றிருக்கிருர்களோ, அவர்கள் இந்தியா முழுவதையுமே தங்களுடைய ஒரு குடையின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்பதற்காக முயற்சி எடுத்துக்கொண்டு, இக்காலத்தில் அமைக்கப்படுகிற சாம்ராஜ்யங்களைப்போல், முன்னே சில சாம்ராஜ்யங்களை அமைத்தார்கள் என்பதைத் தவிர, தேசிய ஒருமைப்பாடு என்பதற்கு இன்று அளிக்கப்படுகிற இலக்கணத்தையொட்டி இந்திய துணைக்கண்டத்திலே அமைந்திருந்த ஒரு அரசை அருள் கூர்ந்து எனக்குக் காட்டுங்கள். இங்கே குப்த சாம்ராஜ்யத்தைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அக்பருடைய மனப்பான்மையைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அசோகனுடைய சாம்ராஜ்யத்தைப்பற்றியும் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவை அத்தனையும் நர்மதையாற்றுக்கு மேலேயே தவிர, நர்மதையாற்றுக்கு கீழே இல்லை என்பதை வரலாறும் பூகோளமும் ஒருசேரக் கூட்டிப்படிப்பவர்கள் நன்ருக உணர்ந்துகொள்வார்கள். ஆனல், அசோகன் அக்பர் இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மை படைத்தவர்கள் எந்தக்கோடியிலே இருந்தாலும், அவர்களை வாழ்த்த வேண்டியதும் வணங்கவேண்டியதும் தமிழகத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, தரணியில் உள்ள அனைவருக்குமே கடமையாகும். அந்த வகையிலே அசோகன் புகழ் பெற்றிருக்கிருர் என்ருல், அந்த வகையிலே அக்பர் புகழ்பெற்றிருக்கிருர் என்ருல், அவர்கள் துவக்கிய, அவர்கள் அமைத்த அரசு ஏன் நிலைக்கவில்லை? நிலைக்காததற்கு என்ன காரணம் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இன்றையதினம் காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில் நாங்கள் ஒரே பேரரசை அமைத்துவிட்டிருக்கிருேம் என்றும், அது அமைத்தது மாபெரும் சாதனை என்றும், அதைப் படிப்படியாக எப்படி அமைத்திருக்கிருர் என்பதைத் தங்களுடைய சாதனையாக நம்முடைய நிதி அமைச்சர் எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்ததையும் அவர்கள் ஆராய்ந்து பார்ப்பார்களானல் இந்த வழிமுறைகளெல்லாம் அசோகருக்கும் அக்பருக்கும் தெரிந்திருக்காது என்று கருதிக்கொண்டிருக்கிறீர்கள்? கனிஷ்கன், ஹர்ஷன் இவர்கள் அதை அறியமாட்டார்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்? அல்லது குப்த, மௌரிய சாம்ராஜ்யத்திலே இப்படிப்பட்ட இராஜதந்திர நிபுணர்கள் இருந்ததில்லை என்று எண்ணுகிறீர்கள்? இதையெல்லாம் யோசித்துப் பார்த்தால், அவர்கள் அத்தனைபேரும் எதை நம்பி ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை அமைத்து, கடைசியில் எது இல்லாததால் அந்த சாம்ராஜ்யம் அழியப்பட்டதோ, அதைப் போலவே இன்றைய தினம் நீங்கள் எதை நம்பி இந்தச் சாம்ராஜ்யத்தை அமைக்கின்றீர்களோ, அது எது இல்லையோ அதனல் அழிக்கப்படப் போகிறது என்பது காலம் அளிக்கும் தீர்ப்பாக இருக்கப்போகிறது.

'பிப்ரவரி மாதத்திலே பார்' என்கிருர் நிதி அமைச்சர். பிப்ரவரி மாதத்தோடு பிரச்சினை தீர்ந்துவிடுவதில்லை. தேர்தலில் ஏற்படுகின்ற விளைவுகளையொட்டி உடனே இந்தப் பிரிவினைப் பிரச்சினையை விட்டுவிடுவார்கள் என்று நிதி அமைச்சர் அவர்கள் கருதுவார்களானல், அவர் பெரிதும் ஏமாற்றத்திற்கு உள்ளாவார்கள். 'இதைப் போலவே கடுமையான சட்டத்தைக்கொண்டு வந்து நாங்கள் அடக்க முடியும், ஆனல், பொறுத்திருக்கிருேம், மக்களே பார்த்துக்கொள்ளட்டும் என்று இருக்கிருேம்' என்று இருபொருள் படும்படியாக நிதி அமைச்சர் பேசுகிருர் என்ருல்—நான் தெளிவாக அவருக்குச் சொல்கிறேன்—எங்களுடைய கொள்கைகளை நீங்கள் மதிக்காது இருக்கலாம். எங்களுடைய வாதங்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனல், எங்களுடைய தூய்மையான இருதயத்தைத் தயவு செய்து சந்தேகப்படாதீர்கள். நாங்கள் இந்தக் கொள்கையில் எங்களை ஈடுபடுத்திக்கொண்ட நேரத்தில் இழிமொழியும் பழிச்சொல்லும் எங்களை வந்து தாக்கும் என்று உணர்ந்த பிறகுதான் ஈடுபடுத்திக்கொண்டோம். அதை அடக்கப் போலிசும் படையாட்களும் பயன்படுத்தப்படும் என்பதை ஒரு துளியும் அறியாமல் அல்ல அந்த நேரத்தில் ஈடுபட்டது. இப்படிப்பட்ட ஒரு பிரிவினைச் சக்தி என்று உங்களால் அழைக்கப்படுகிற சக்தியைத் தேர்தலிலே இலட்சக்கணக்கான பணத்தைச் செலவழித்து ஒழித்துக் கட்டலாம் என்று திட்டம் இடுவீர்கள் என்பதும் நாங்கள் அறியாததல்ல. ஆனல், நாங்கள் கேட்கிற அந்தக் கோரிக்கை இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்ருல், நாங்கள் அத்தனை பேர்களும் எங்களுடைய இரத்தத்தைச் சிந்தி அடையவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிருேம். அந்த இரத்தமும் உங்கள் கரத்திலே இருக்கும் கத்தியால் வெளிப்படவேண்டும் என்று நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருேம். ஆகையால், கத்தி இருந்தால் கூர்மையாகத் தீட்டிக்கொள்ளுங்கள். சட்டம் இருந்தால் விரைவில் அமுலுக்குக் கொண்டு வாருங்கள். எப்படிப்பட்ட பயங்கரமான நடவடிக்கைகளிலே ஈடுபடுவதானலும் அவைகளுக்கெல்லாம் சளைக்காமல் இருப்பதற்குக் காரணம்— தனிப்பட்ட முறையில் நாங்கள் பெரிய துணிச்சல்காரர்கள் என்பது அல்ல—நாங்கள் அந்த இலட்சியத்தில் அவ்வளவு பரிபூரணமாக நம்பிக்கை கொண்டிருக்கிருேம். 'இது என்ன பயித்தியக்காரத்தனம்,!' என்று நிதி அமைச்சர் அவர்கள் கருதலாம். 'இது என்ன பயித்தியக்காரத்தனம்!' என்றுதான் சுயராஜ்யத்திற்காகப் போராடிய நேரத்திலும் பல பெரியவர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். அது இன்றிருக்கும் பல காங்கிரஸ்காரர்களுக்கு விளங்காமலிருக்கலாம்.

**திரு. சி. சுப்பிரமணியம்:**

நீங்களே நினைத்தீர்கள்.

**திரு. சி. என். அண்ணுதுரை:**

நானும் நினைத்ததாக நம்முடைய நிதி அமைச்சர் சொல்கிருர். எனக்கும் திராவிட கழகத் தலைமைக்கும் ஏற்பட்ட கருத்து மாறுபாட்டுக்குக் காரணமே சுயராஜ்யத்தைப்பற்றி நான் கொடுத்த விளக்கத்திற்கும் திராவிட கழகத் தலைமை கொடுத்த விளக்கத்திற்கும் அடிப்படையிலே இருந்த வித்தியாசம் தான் என்பதை நாடு அறியும். ஆனல், உலகம் சுற்றுகிற அமைச்சர் இந்தச் சின்ன விஷயத்தை அறியமாட்டார்;

இதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையே பார்க்கட்டும். இந்தியா எந்தக் காலத்திலாவது ஒரே அரசிலமைப்பின் கீழ் இருந்ததுண்டா? அதற்கான ஆதாரங்கள் தரப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் — இரண்டொரு சமஸ்கிருத ஸ்லோகங்கள் ஆங்கிலத்தில் போடப்பட்டிருக்கின்றன. அவற்றுக்குப் பொருள் விளங்கவில்லையே தவிர, மற்றவைகளுக்கு நன்றாகப் பொருள் விளங்குகின்றது — இந்தியா ஒரு அரசிலமைப்பின் கீழ் எந்தக் காலத்தில் இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் ஒன்றுமே இல்லை. He was impressed by the toleration of the people,' என்று மக்களுடைய சகிப்புத் தன்மையை அவர் பாராட்டினார் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சகிப்புத் தன்மை இப்போதுதான் இருக்கிறது என்பதல்ல. அந்தக் காலத்திலிருந்து இன்றுவரை தமிழகத்தில் அந்தச் சகிப்புத் தன்மை எப்போதும் தலை நிமிர்ந்து நிற்கிறது. வடநாட்டில் ஏற்படக்கூடிய கலகங்கள் இங்கே நடந்ததில்லை. அலிகாரில் ஏற்பட்டதுபோல, அஸ்ஸாமில் ஏற்பட்டதுபோல, இங்கே ஏற்பட்டதில்லை. நேரு பண்டிதரை 90 நிமிஷங்கள் பேசவிடாது ஆமதாபாத்தில் தடுத்து நிறுத்தியதைப் போல இங்கே நடைபெறுவதில்லை. இது தமிழகத்திற்கேயுரிய தலை சிறந்த பண்பாடாகும்; தமிழர்களுக்கே அத்தகைய பண்பாடு உண்டு. ஆனால் இதைத் தவறாக அவர்கள் எடுத்துக்கொண்டு, 'தமிழர்கள்தானே, அடங்கிக் கிடப்பார்கள்', என்ற எண்ணத்தில் நடந்து கொள்வார்களேயானால், இந்திய ஒற்றுமை என்ற பேச்சு எங்கே கொண்டு போய்ச் சேர்க்கும் என்பதை நான் நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு பெரியவரே என்னிடம் சொன்னார். "நான் அங்கேயே நாட்டைப் பிரிப்பது அண்ணாத்துரையல்ல, உத்தரப் பிரதேசக்காரர்கள்தான் தென்னாட்டுப் பிரிவினையைச் செய்துவிடப் போகிறார்கள் என்பதைச் சொல்லி வந்தேன்'' என்று அந்தக் காங்கிரஸ் பிரமுகர் சொன்னார். நிதியமைச்சரவர்கள், "அவர் யார்'' என்று என்னிடத்தில் கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன், கேட்காமலேயே அவருக்குத் தெரியும். இன்றைக்குக் காங்கிரஸ் வட்டாரத்தில் உள்ளவர்களே, குறிப்பாக டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் பாராளுமன்றத்திலே India that is Bharath, Bharath that is U.P. என்று குறிப்பிட்டிருக்கிறார். அவர் ஏன் இப்படிப் பேசவேண்டும்? இன்றையதினம் நமது நிதியமைச்சரவர்கள், இந்திய ஒருமைப்பாடு குறித்துப் பேசும்போது, பழைய சாதனைகளைப் பற்றி, யார் யார் எதையெதை விட்டுக்கொடுத்துவிடவேண்டும் என்பதைப் பற்றிப் பேசினார். எல்லாச் சிற்றரசுகளையும் ஒன்றாகச் சேர்த்தது மாபெரும் சாதனை என்று குறிப்பிட்டுக் கொண்டார்கள். உண்மையில் அவர் அதை அப்படிச் சொல்லிக்கொண்டது சர்தார் பட்டேலுக்குப் பெருமையளிக்கக் கூடியதா அல்லது சிறுமையளிக்கக் கூடியதா என்பதை யோசிக்க வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்த அத்தனை சிற்றரசர்களும் அன்றையதினம் வெறும் ஜரிகைச் சட்டை குல்லா அணிந்த உல்லாசப் பேர்வழிகளாக இருந்த நேரத்தில், குதிரையில் ஏறுவதற்கு அஞ்சி, குதிரையில் ஏறி வந்தவர்களைத் தூர இருந்து கண்டு களித்த நேரத்தில், மக்கள் புரட்சி செய்துவிட்டால் என்ன செய்வது என்று அரண்மனையைச் சுற்றி எட்டு மதில் சுவர்கள் எழுப்பிக்கொண்டு வாழ்ந்த நேரத்தில்—இப்படி உளுத்துப் போய்ச் சீட்டுக்கட்டு ராஜாக்களைப்போல் வாழ்ந்துகொண்டிருந்தவர்களை டில்லிக்கு அழைத்தவுடனே 'போனது போகட்டும், மிச்சம் என்ன', என்று கை நீட்டியவர்களின் அரசுகளை ஒன்று சேர்த்தது பெரிய சாதனை என்றால், அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதைப் பெரிய சாதனை என்றே வைத்துக்கொள்வோம். அதனால் நிதியமைச்சரவர்கள் சந்தோஷப்படலாம் என்றால் அதைப் பெரிய சாதனை என்றே வைத்துக்கொள்வோம் அதனால் நிதியமைச்சரவர்கள் சந்தோஷப்படலாம் என்றால் அதைப் பெரிய சாதனை என்றே சொல்கிறேன். அந்தப் பெரிய சாதனைக்குச் சர்தார் வல்லபாய்பட்டேலுக்கு உறுதுணையாக இருந்தவர் திரு. வி. பி. மேனன் என்பதை யாரும் அதற்குள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். சிற்றரசுகளை ஒன்றாகச் சேர்ப்பதற்குப் பட்டேலுக்கு வலதுகரம்போல இருந்தவர் வி. பி. மேனன். என்றைக்குமே இந்தியா ஒரு நாடாக இருக்கவேண்டுமென்பதில் அவருக்குள்ள ஆர்வம் குறைந்ததல்ல. இன்றையதினம் அவர் டில்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டைப்பற்றி 'It was a mountain that brought forth a mouse. One is forced to conclude that it was nothing more than a Congress election stunt.' என்று, "மலையைக் கல்லி எலியைப் பிடித்தார்கள், இது காங்கிரஸ் கட்சி கையாள்கிற தேர்தல் தந்திரம்'' என்று சொன்னார். அவர் எங்களைப்போல் பிரிவினைக் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல. பதவி கிடைக்காத "ப்ரஸ்ட்ரேஷனில்'' பேசுகிறார் என்று சொல்ல முடியாது. அவர் மிகப் பெரிய பதவியெல்லாம் வகித்தவர். அவரே தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டைப்பற்றி இப்படிப் பேசியிருக்கிறார் என்றால், அதைக் கவனிக்கவேண்டும். ஆச்சாரிய கிருபாளனி அவர்கள் "பாவிகள் எல்லாம் ஒன்றாகக் கூடிப் பேசினார்கள், பரிகாரம் தேடுவதற்காக'' என்று பேசியிருப்பதும் இந்த மகாநாட்டைப் பற்றித்தான். தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றி பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச்சேர்ந்தவரும், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் வி. கே. இராமசாமிமுதலியார் அவர்களும் சிலகருத்துக்களைச் சொன்னார்கள் என்றால் எங்களுக்காக மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சிக்கும் சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள்தான். "இந்தியா முழுவதற்குமே ஒரே ஒரு சர்க்கார்தான் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். சிலர் தனித் தனியாகப் பிரிந்து போய்விடவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் இரண்டுக்கும் நடுவில் போகிறோம்'' என்று அவர்கள் சொன்னார்களே, பொருளாதார அடிப்படையில், அரசியல் அடிப்படையில் எல்லாத் துறைகளிலும் அவர்கள் நடுவில் போகிறோம் என்று சந்து கண்ட இடத்தில் நுழைகிற தன்மைதான் இந்த அவல நிலைக்குக் காரணம் என்று குறிப்பிட விரும்புகிறோம். இது எந்தப் பிரச்னையையும் தீர்ப்பதற்குப் பயன்படாது. பிரச்னைக்குத் தீர்வாக அமையாமல் பிரச்னையை ஒத்திப் போடுவதற்குப் பயன்படுமே தவிர, வேறு எவ்வித பயனும் கிடையாது. எந்தப் பக்கம் சாய்கிறதோ அந்தப் பக்கத்தில் சேர்ந்துகொள்ள இந்தக் கொள்கையை நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். உண்மையில் உங்களுக்கு இந்த இரண்டு கொள்கையிலும் நம்பிக்கை கிடையாது.

நான் உள்ளபடியே சொல்கிறேன். இந்தியா ஒரே ஒரு நாடாகத்தான் இருக்கவேண்டுமென்று சொன்னால், இந்த ஒருமைப்பாடு தேவை என்று சொன்னால் தமிழ் மொழி அதற்கு இடையூறாக இருக்குமென்றால் அதைக் கூட விட்டுக்கொடுத்தால் என்ன? தமிழ் மொழியினால்

தேசிய ஒற்றுமை குலையும் என்று சொன்னால் தேசிய ஒற்றுமைக்காக அதை விட்டுக்கொடுத்து விடுவார்களா. உங்களுக்குச் சிலப்பதிகாரமும் வேண்டும்; மனுதர்மமும் வேண்டும்; தேவநாகிரியும் வரவேண்டும்; தமிழும் தேவை; கூழும் வேண்டும்; மீசையும் வேண்டும், எத்தனை காலத்திற்கு இந்தப்போக்கு? தேசிய கவுன்சில் கூட்டத்திலே நம்முடைய நிதியமைச்சரவர்கள் இந்தியை வரவிடமாட்டோம். எங்கள் தமிழ் மொழியை அழிக்க இடம் கொடுக்கமாட்டோம் என்று சொன்னால் அதைத்தான் நான் நாட்டுப்பற்று, மொழிப்பற்று என்று கூறுகிறேன். அதுதான் இனவுணர்ச்சி, அந்த மொழிப்பற்று இருக்கிறவரையில். நாட்டுப்பற்று இருக்கிறவரையில், தமிழ் உணர்ச்சி இருக்கிறவரையில், "தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு" என்று நாமக்கல் கவிஞர் பாடிய கவிதா தத்துவம் உள்ளத்தில் இருக்கிறவரையில் எவ்வளவு நேர்தல் வந்தாலும், எங்களை அழித்து அடைத்துவிடாது; எவ்வளவு சட்டம் வந்தாலும் அழித்துவிட முடியாது. பிப்ரவரியில் பார்த்துவிடலாம் என்கிறார் நமது நிதி அமைச்சர். பிப்ரவரியிலே பார்க்கலாம்; தேர்தலைப் பொறுத்தா எங்கள் கட்சியிருக்கிறது? அரசியல் வாழ்வு என்பது ஐந்து வருஷத்திற்கு ஒருமுறை அளிக்கப்படுகிற மரணசாசனமா? தேர்தலிலே தோற்றார் என்பதற்காக உள்துறை அமைச்சர் பக்தவச்சலத்தின் அரசியல் வாழ்வு அதோடு அழிந்துபோய்விடவில்லை. தேர்தலில் தோற்றதினால் திரு. கோபால்ரெட்டி அரசியல் வாழ்வை விட்டு ஓடிப்போய்விடவில்லை. இன்று டில்லி அமைச்சராக இருக்கிறார். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அங்கே போகிறபோது அவர் விட்டுக் கொடுப்பாரா மாட்டாரா என்று தெரியவில்லை. திரு. குமாரசாமிராஜா தேர்தலில் தோற்றுப்போன பிறகுதான் கவர்னர் கிரீடம் அவரைச் சேர்ந்தது. தேர்தல் யாரையும் சாகடித்துவிடவில்லை. ஆகவே, அந்தப் பூச்சாண்டியை எங்களிடம் காட்ட வேண்டாம் என்று நிதி அமைச்சர் அவர்களிடம் சொல்ல விரும்புகிறேன். இதுவரை நிதி அமைச்சராக இருந்தவர் ஆலமரத்தடியில் உட்கார்ந்து ஆருடம் சொல்பவரைப்போல் யாரை மிரட்டப் பேசுகிறார்கள்? அவருக்கு நிச்சயமாகச் சொல்கிறேன். எங்களுடைய நாட்டுப் பிரச்னை தேர்தலோடு இணைக்கப்படவில்லை. தேர்தலோடு இணைக்கப்பட்டதல்ல திராவிட நாட்டு விடுதலை இயக்கம். தேர்தலுக்குப் பிறகும் கட்சியின் கருத்து ஊடுருவி நிற்கும்.

வேண்டுமானால் அவர் வாதத்திற்காக இன்றைக்குத் தமிழ்நாடு கேட்பார்கள். நாளைக்குக் கோவையைக் கேட்பார்கள் என்று கேலி பேசுவதில் ஒன்றும் சிரமமில்லை. நான்கூடச் சொல்வேன்—இன்றைக்கு இந்திய தேசிய ஒற்றுமை என்பவர்கள் இமயத்தை எல்லைக்கோடாக ஏன் சொல்லக்கூடாது? மெசபடோமியாவையும் சேர்த்துக்கொள்ளலாமே! சீனா பக்கத்திலும் ஏன் போகக்கூடாது? இப்படி நானும் கூடப்பேசிக் கொண்டே போகலாம்.

இன்னும் அவர்கள் இந்தத் தேசிய ஒருமைப்பாட்டுக்காகக் கூட்டப்பட்ட மகாநாடே தேசிய ஒருமைப்பாடு இருப்பதைக் காட்டவில்லை என்று சொல்கிறார்கள். இதுவரையில் எல்லா ஏடுகளும் எழுதிக்கொண்டு வந்ததும், எல்லாத் தலைவர்களும் எடுத்துப் பேசிக் கொண்டு வந்ததும் 'நாட்டிலே ஒரு சீர்குலைவு ஏற்பட்டுவிட்டது. அதைச் சரிப்படுத்தத்தான் நாங்கள் இதைச் செய்கிறோம்' என்று சொன்னார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பின்னால் அதைப் படிப்படியாக மாற்றிக்கொண்டு வந்ததைப்போல் இவ்வளவு வெடிப்பும் அடிப்படையில் இல்லை, மேலேதான் இருக்கிறதென்று சொன்னார்கள். யாராவது கட்டிட நிபுணரைக் கேளுங்கள். அடிப்படை சரியாக இல்லாமல் போனால்தான் மேலே வெடிப்பு ஏற்படுமே தவிர, அடிப்படை சரியாக இருந்தால் மேலே வெடிப்பு இருக்காது. ஆகவே மேலே வெடிப்பு இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் அடிப்படை சரியாக இல்லாததுதான். ஆகையால்தான், இந்தியா ஒரே நாடு என்று சொல்லப்படும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் அரசியல் சட்டமானது மிக விரைவிலே நிறைவேற்றப்பட்டதாகப் பெருமைபட்டுக்கொண்டார்கள்—வந்த ஆபத்தே, அதிலேதான் இருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தியத் துணைக்கண்டத்தைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன்னுடைய பிடியிலேயிருந்து நீக்குவது என்று தீர்மானித்த நோக்கில், இங்கே அரசியல் திட்டங்கள் பற்றிப் பேசப்படவில்லையா? 'குக்' திட்டம் பற்றிப் பேசப்படவில்லையா? ஐந்து ராஜ்யத் திட்டங்கள் பற்றிப் பேசப்படவில்லையா? அதிலிருந்து என்ன நமக்குப் புரிகிறது? இருக்கும் வரை ஒரே அமைப்பாக இருக்க வேண்டுமென்பதை மட்டுந்தான் நாட்டிலேயுள்ளவர்கள் கவனித்தார்கள் என்பது அல்ல. நீங்கள் சொன்னதற்கு மதிப்புக் கிடைத்ததா? அரசியல் தத்துவவாதிகள் அதை ஏற்றுக்கொண்டார்கள் என்று கருதுகிறீர்கள்? "பெடரேஷன்" என்று நிதியமைச்சரவர்கள் வாதாடினார்கள். பெடரேஷனுக்குள்ள இலக்கணத்தின்படி இந்திய பெடரேஷன் இருக்கிறதா? "யூனியன் ஆப் இண்டியன் ஸ்டேட்ஸ்" என்று போடப்பட்டிருப்பதில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகார வரம்பைப் பார்க்கும்போது, நல்ல பெடரேஷன் என்றால் மிச்ச அதிகாரத்தைத்தான் (Residuary Powers) அங்கே கொடுத்துவிடுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் மத்திய சர்க்காருக்கல்லவா அந்த அதிகாரம் இருக்கிறது. தேசிய ஒருமைப்பாடு மாநாட்டிலேகூட, ஒற்றுமைக்கு வழி என்ன என்று கேட்கும்போது, கல்வியை "concurrent subject" ஆக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "Education is strictly a State subject" ராஜ்ய சர்க்காருக்குத் தனியாக இருக்கின்றபோது ஒருவர் யோசனை சொல்கிறார்—"அதை (Residuary powers) ஆக்கலாம்" என்று. அதைப் போலத்தான்—"It was felt that this link must ultimately be Hindi" இங்கே நிலைத்துப்போய்விட்டது கடைசியாக இணைப்புச் சங்கிலி இந்திதான். "இப்போது விழித்துக்கொண்டிருக்கிறார்கள். நன்றாகத் தூங்கட்டும்" என்றும் சொல்லும் தன்மைக்கும் this link must ultimately be Hindi என்பதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது, என்பதை அறிய விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஆட்சியிலிருக்கும் வரையில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவருந்தான், பாவம்—எத்தனை காலத்திற்குத்தான் சண்டைபோட்டுக் கொண்டிருப்பார்கள்? என்னைப்போல் பதவிக்காக ஆசைப்படாமலோ, பதவியைப்பற்றி எண்ணிப் பார்க்காமலோ, மேலே ஆகாயம், கீழே பூமி என்று இருந்தால் பரவாயில்லை. அப்படி இருந்தால் இருப்பதும் ஒன்றும் போகாது. நம்முடைய நிதி மந்திரி சற்றுத் துணிந்தால் உள்ளதும் அல்லவா பறிபோகும். எப்படி அவர் அந்தத் தியாகத்திற்குத் தயாராக முடியும்? ஏற்கனவே பெரிய தியாகத்தைச் செய்துவிட்டவர்களாயிற்றே அவர்கள். அவர் அந்தத் துணிச்சலுக்கு வரமாட்டார் என்பதுபற்றி ஆச்சரியப்படவில்லை. ஆனால் துணிவு பெற்றிருப்பவர்களைத் தயவுசெய்து இழிவாகக் கருதா

தீர்கள். அவர்கள் அறிந்துதான், விளைவுகள் என்னென்ன ஏற்படும் என்பதைத் தெரிந்துதான் இதிலே ஈடுபட்டிருக்கிறார்களே தவிர, நீங்கள் கருதுகிறபடி சிறுபிள்ளைத்தனமாக இதிலே ஈடுபடவில்லை. இங்கே இருக்கின்றவர்கள் ஏதோ நீங்கள் துப்பாக்கியைத் தூக்கியவுடன் அதை எதிர்த்து நிற்க முடியாதவர்கள் என்று கருதாதீர்கள். இருக்கின்ற உள்ளமே ஒன்றுதான். அது போகப்போவதும் ஒருதடவைதான். அவ்வாறு போவது பிரிவினைப் பிரச்னைக்காகப் போகட்டும் என்ற உணர்வில்தான் எங்கள் பக்கத்தில் இருக்கின்றவர்கள் இருக்கிறார்கள். அந்த உணர்வு எங்களோடு பிறந்தது. அவர் பழகும் இடத்தில் அப்படிப்பட்ட தியாகிகள் வரிசை ரொம்பவும் குறைந்து, மற்றவர்கள் அதிகமாக இருக்கும் நேரத்தில் அவர் காங்கிரஸ் கட்சியில் இருப்பதால் அந்தப் பக்கத்தில் இருக்கும் வீரமும் இன்றைய தினம் அவருக்குப் புரியாது.

இன்னொன்றையும் நான் கேட்க விரும்புகிறேன். பெரிய நாடாக ஏன் இருக்கவேண்டும்? எதற்காக இருக்கவேண்டும்? ஒரு நாடு பெரிய நாடு, சின்ன நாடு என்பதற்கு என்ன அடையாளம் வைத்திருக்கிறார்கள்? ஒரு நாடு, இத்தனை மைல் நீளம், இத்தனை மைல் அகலம் இருக்கவேண்டுமென்ற கணக்கு இருக்கிறதா? சிறு பிள்ளையை ஏமாற்றுவதுபோல், இரண்டு வெல்லக் கட்டியை எடுத்துக்கொண்டு இது பெரிதா, அது பெரிதா என்று ஏமாற்றும் சுகப்பனைப்போல், இந்தியாவரையில் காட்டி இவ்வளவு இருக்கவேண்டுமென்கிறீர்களா? எந்த அர்த்தத்திலே பேசுகிறீர்கள்? 'Economic viability" பேசுகிறீர்களா? "Political viability" பேசுகிறீர்களா? அல்லது "Military viability" பேசுகிறீர்களா? எதிலே பேசுகிறீர்கள்? அப்படிப் பார்க்கப் போனால் ஒவ்வொரு நாட்டின் எல்லையையும் அறிந்து இன்னின்ன அளவில்தான் நாடு இருக்கவேண்டும், அப்போதுதான் தேசிய நாடாகும் என்று சொல்லுங்கள். நம்முடைய பண்டித நேரு அவர்கள் அடிக்கடி ஐரோப்பாக் கண்டத்தில் நடக்கும் மாநாட்டில் ஐரோப்பாவிலுள்ள சிறு சிறு நாடுகளின் எல்லையைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லலாமே. அவருக்கு அந்த அலுவல் இல்லையென்றால், நம்முடைய நிதியமைச்சர் அங்கு போய்வந்த பழக்கமுள்ளவர் சொல்லிவிட்டு வருவார். அவர்களும் கேட்டுக்கொள்ளுவார்கள். உலகமே ஒன்றாக ஆகவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். உண்மை. என்னுடைய நாடு என்னிடத்தில். நாம் எல்லோரும் சேர்ந்து ஒன்றாகலாம். யார் எல்லைக்கோட்டைக் கலைக்கிறார்கள்? ஆகையால் இந்திய ஒற்றுமை, இந்தியா என்று சொல்வது கட்டுப்பட்டுப்போயிருக்கும் ஒரு இடத்தில் இருப்பதால் — ஆங்கிலத்தில் சொல்வதானால் "They are maintaining the status quo" இருப்பதை ஆதரிக்கிறார்கள். இருப்பதை ஆதரிப்பதிலே சுவை இருக்கிறது, பலன் இருக்கிறது. சில வேளைகளிலே எளிதாகவும் இருக்கிறது. ஆனால், தேவைப்படுவதைக் கேட்பதில்தான் எரிச்சலை மூட்டவேண்டி வரும், பல பேருடைய பகை வரும். பழிச்சொல் வரும். தேவைப்படுவதைக் கேட்பவர்கள் இருப்பதைக் கொண்டு திருப்தியடையமாட்டார்கள் என்பதை நான் கனம் நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உலகத்தின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், சிறிய நாடுகளால் உலகத்தின் பண்பாடு வளர்ந்திருக்கிறதா, பெரிய நாடுகளால் வளர்ந்திருக்கிறதா என்று பார்த்தால், உயர்தரமான தத்துவத்தை, இன்றும் போற்றத்தக்க நல்ல பண்பாட்டினை, கலையை, அரசியல் தெளிவை, இவை அத்தனையும் பெற்றிருந்தது ஐரோப்பா நாட்டிலுள்ள அந்த வரலாற்றின்படி "கிரீக் சிடி ஸ்டேஸ்"லேயே தவிர, ஐரோப்பாகண்டம் என்று வளர்ந்த பிறகு அல்ல. நம்முடைய நாட்டை எடுத்துக் கொண்டாலும், தமிழகம் தனியாக இருந்தபோதுதான் திருக்குறளை இயற்றிய வள்ளுவர் பிறந்தார். அப்போதுதான் நம்முடைய நாட்டிலே அகமும் புறமும் இயற்றப்பட்டன. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் அந்தக் காலத்திலேதான் தோன்றின. ஆகவே, விரிவாக இருந்தால்தான அறிவு பரவும் என்று பொருளல்ல. அதே போன்றுதான் சிறு நாடாக இருந்தபோதுதான் ரோம் நாட்டில் வல்லமைமிக்கோர் இருந்தனர். ஜூலியஸ் சீசருக்குப் பிறகு ரோமன் எம்பயர்—சாம்ராஜ்யமான பிறகு விரிவாகப் பல இடங்களில் வல்லமை குறைந்ததால் நாளாவட்டத்தில் உடைபட்டுப் போய்விட்டது என்பதைத்தான் நமக்கு உலக வரலாறு காட்டுகிறது. ஏன் உலக வரலாறு தரும் பாடத்திற்கு முரணாக அரசியல் அமைப்பை ஏற்படுத்திப் பார்க்கவேண்டும்? அதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். சிறிய நாடுகள் இன்றையதினம் உலகத்தில் இல்லையா? சைப்ரஸ் நாட்டின் அகல நீளம் எவ்வளவு? மால்டா தீவு எவ்வளவு சிறியது? அது தனியரசாக வேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கவில்லையா? இங்கிலாந்தின் பக்கத்திலுள்ள அயர்லாந்து தேசம் எதற்காகத் தனிநாடாக இருக்கவேண்டும்? இங்கிலாந்துடன் இணைந்திருந்தால் என்ன கஷ்டம்? அங்கு தோன்றிய கலைவர்கள் எல்லாம் தற்குறிகளா? பேசப்படும் பொருளும் வாதங்களும், அவர்கள் ஏற்ற தியாகமும் வீணுக்காகவா? இவைகளையெல்லாம் நீங்கள் நிச்சயமாக யோசித்துப் பார்க்கவேண்டும்.

இன்றையதினம் ஐக்கியநாடுகள் மன்றத்தில் 101-நாடுகள் இடம்பெற்றிருக்கின்றன நூற்றொன்று தனித் தனி நாடுகள் தங்களுடைய உறுப்பினர்களை—தங்கள் தங்கள் பிரதிநிதிகளை - ஐக்கிய நாடுகள் மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றால், அத்தனை நாடுகள் தனி நாடுகளாக இருக்கின்றன என்பதுதான் அதன் உட்பொருள் ஆகும் இதைப்பற்றி எடுத்துச் சொல்லுகிற நேரத்தில். கனம் நிதி அமைச்சர் அவர்கள் எங்களை 'இது மிகவும் சின்னக்கூட்டம்' என்றார்கள். உண்மை—இல்லை என்று யாரும் மறுக்கவில்லை. நூற்றைம்பதுபேர்களை பின்னால் வைத்துக்கொண்டிருக்கிற நிதியமைச்சரோடு முன்னால் 10-12-பேர்களை வைத்துக் கொண்டிருக்கிற நான் ஒரு பெரிய கூட்டம் என்று வாதிடமுடியாது. இனிமேல் நாட்டிலே பிரிவினையே கூடாது. உள்நாட்டு யுத்தமே வந்தாலும்கூடப் பிரிவினைக்கு ஒப்புக்கொள்ளமுடியாது என்று பண்டிதநேரு அவர்கள் பேசியிருப்பதை வைத்துக்கொண்டு கனம் சின்னதுரை அவர்கள் நாட்டைப் பிரிவினை செய்ய வேண்டும் என்று சொல்லுகின்ற நாங்கள் உள்நாட்டு யுத்தத்தைத் துவக்கிவிடுவோம் என்று எண்ணிக் கொண்டு பேசினார்கள். நாங்கள் யாரும் அப்படி ஆரம்பிக்கப் போவதாக இல்லை. எங்களில் யார் யாராலாவது கொல்லப்பட்டாலும் இறக்கச் சித்தமாக இருக்கிறோமே தவிர, யாரையும் சாகடிக்க வந்தவர்களல்ல. செத்த பிறகு..........

திரு. ஏ. மாரியப்பன்: இதை உங்கள் சரித்திரமே சொல்லுகிறது.

திரு. சி. என். அண்ணாதுரை:

என்ன...என்ன...சரித்திரம் படிக்கவேண்டுமா?... உன் கிட்டே கத்துக்கிறேன் அப்பா...உன் கிட்டே கத்துக்கிறேன்......

THE HON. SRI C. SUBRAMANIAM:

Sir, let this not become a street-quarrel.

SRI C. N. ANNADURAI:

I wish the Hon. Leader of the House controlled his own party-men instead of others.

DEPUTY SPEAKER:

Order, order. The hon Member may continue his speech. I am here to control the proceedings in the House.

SRI C. N. ANNADURAI:

Sir, I am not concerned with the 'thorn' aimed at me. I am only concerned with the hon. Member's cutting the flow of my thought

THE HON SRI C. SUBRAMANIAM: சரி, பேசுங்கள்.

SRI C. N. ANNADURAI:

So, the Hon. Minister, as the Leader of the House, is prepared to advise me only and not this party-men?

THE HON SRI C SUBRAMANIAM:

The advise applies to both sides But, as the Leader of a Party, the hon Member Sri Annadurai has to set up a proper pattern and standard in the discussion If he uses the 'singular' from while addressing another hon Member, does he not expect it back himself?

SRI C N ANNADURAI:

Did I use the singular' form ?

THE HON SRI C SUBRAMANIAM:

Certainly, the hon. Member did.

SRI C. N ANNADURAI:

Only when the hon. Member opposite said that I should learn history or some such thing, I think I said like that and not otherwise.

Sri P. U Shanmugam rose.

DEPUTY SPEAKER:

Order, order. I appeal to the hon. Members to maintain discipline and order within the House. The hon. Member may continue his speech.

SRI C N. ANNADURAI:

We shall forget that, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM:

Very generous of you!

திரு. சி. என். அண்ணுதுரை:

உள்நாட்டு யுத்தத்தை நாங்கள் ஆரம்பிப்போம் என்று யாரும் தவருக எண்ணிக்கொள்ளத் தேவையில்லை. இந்தியாவின் மிகப் பெரிய தலைவர் இப்படிப் பேசினுர் என்ருல், விரோதத்தை உண்டாக்குவதற்குப் பேசினுரே தவிர, நாங்கள் அல்ல உள்நாட்டுப் போரைத் துவக்கப்போவது. உள்நாட்டு யுத்தத்தைப்பற்றி மதுரையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் பேசியதைப் பார்த்தேன். அமெரிக்காவை நினைவுபடுத்தி நாடு பிரியவேண்டுமென்று சொல்லி உள்நாட்டு யுத்தத்தை அமெரிக்காவில் நடத்தினுர்கள் என்று சொன்னுர்கள். அமெரிக்கப் போராட்டத்திற்கு அடிப்படைக் காரணம் ராஜ்ய சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் ஏற்பட்ட தகராறு அல்ல. அமெரிக்காவில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்திற்குக் காரணம் வடக்குப் பகுதிக்கும் தெற்குப் பகுதிக்கும் அடிமை வியாபாரப் பிரச்னையில் ஏற்பட்ட தகராறு காரணமே தவிர, ஒருவருக்கொருவர் ராஜ்ய அதிகாரத்திற்காக உள்நாட்டு யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. அமெரிக்க வரலாற்றை—அமெரிக்காவிற்கே போய் வந்திருந்தாலும் கூட—படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்காது என்று நினைக்கிறேன்—படித்துப்பார்த்து அடிமைப் பிரச்னைக்கும் உள்நாட்டு யுத்தத்திற்கும் உள்ள தொடர்பை அறிந்து மற்றொரு இடத்தில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமெரிக்கா ஐக்கியப்பட்டதாகச் சொன்னுலும் அடிமைப் பிரச்னை வரும்போது—நீக்ரோ பிரச்னை வரும்போது—வடக்கே இருக்கிறவர்களுடைய மனப்பான்மை வேருக இருக்கிறது. தெற்கே உள்ளவர்களுடைய மனப்பான்மை வேருகஇருக்கிறது, ஆகையால் ரேஷ்யல் இன்டிக்ரேஷன்—இனங்களை எப்படி இணைப்பது—என்ற அந்த வேலையில் அவர்கள் இன்று ஈடுபட்டிருக்கிருர்கள். அமெரிக்காவைக் காட்டி உள்நாட்டு யுத்தம் இங்கே நடக்கும் என்று சொல்லுவதைப்போல நான் அமெரிககாவை ஆதாரத்திற்கு அழைக்கிறேன். அமெரிக்காவில் தோன்றிய உட்ரோ வில்ஸன் தான் 'The principle of self-determination' சுயநிர்ணய உரிமை ஒவ்வொரு பகுதிக்கும் வேண்டுமென்ற ஒரு முக்கியமான உண்மையை நாட்டுக்கும் உலகத்திற்கும் அளித்தார்கள். ஆகையால் அமெரிக்காவிலிருந்து எடுக்கக்கூடியது உள்நாட்டு யுத்தம் மாத்திரமல்லாமல் உட்ரோ வில்ஸன் பேசியிருக்கிற "The principle of self-determination"–சுய நிர்ணய உரிமை–அதைப்பற்றியும் அவர்கள் எடுத்துக்கொள்ளலாம. ஆகையால் சுய நிர்ணய உரிமை என்ற அடிப்படையில் நாங்கள் தனிநாடு அமையவேண்டும், நாம் தனிப்பட்ட பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்தில், பிரிவினை என்று நீங்களாகத் தப்பு அர்த்தம் எடுத்துக்கொண்டு "ஐயயோ, உள்ளதிலிருந்து பிரிக்கலாமா" என்று நீங்களே எடுத்துக்கொண்டு அடிப்படையை ஆராய மறுக்கிறீர்கள். பொதுப்படையாகப் பேசும்போது கொச்சை மொழியில் பிரிவினை என்று சொல்லப்பட்டாலும், இருப்பதிலிருந்து பிரித்து எடுப்பது அல்ல. தனியாக இருந்ததை யாரோ எடுத்துக்கொண்டுபோய் இணைத்து விட்டிருக்கிருர்கள், அந்த இணைப்பு நல்லதல்ல என்று தோன்றியிருப்பதால் அதிலிருந்து விலகவேண்டும், தனித்து இயங்கவேண்டும், தனி அரசாகவேண்டும் என்று சொல்லுகிருேம். அதை விட்டு உடனே பிரிவினையினுல் ஏற்பட்ட பாகிஸ்தானைப் பார்ப்போம். பாகிஸ்தான் பிரிவினையினுல் ஏற்பட்ட பயங்கர சம்பவத்திற்குக் காரணம், ஏற்பட்ட சோகத்திற்குக் காரணம். பிரிவினையினுல் ஏற்பட்டதல்ல — பிரிவினைக்குப் பிறகு இந்தியாவில் இருக்கவேண்டியவர்கள் இந்துக்கள் பாகிஸ்தானத்திலும், பாகிஸ்தானுக்குச் சொந்தக்காரர்கள் என்று நீங்கள் சொல்லுகிற முஸ்லீம்கள் இந்தியாவிலும் இருந்த காரணத்தினுல் இந்தக் கலவரங்கள் ஏற்பட்டன. அங்கு ஏற்பட்டது பிரதேசப் பிரிவினையே தவிர, மக்கள் பிரிவினை அல்ல. இன்றைய தினம் திராவிடநாட்டுப் பிரிவினை வேண்டுமென்று சொல்லும்போது 10 மைல் கூட்டினுலும் குறைத்தாலும் எந்த வெளிநாட்டுக்காரர்கள் உள்ளே வந்து அகப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள்? இதனுல் என்ன பயங்கரமான கலவரம் வந்துவிடும் என்று பயமுறுத்துகிருர்? இங்கு கலவரம் வரும் என்று சொல்லும்போது, பார்வை தெரியாத குருடன் ஒரு குழந்தை செத்துவிட்ட வீட்டின் தெருத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு

"குழந்தை ஏன் செத்துவிட்டது" என்று கேட்டு, "பால் குடித்துச் செத்துவிட்டது" என்று ஒருவன் சொல்ல, "பால் எப்படி இருக்கும்?" என்று அந்தக் குருடன் கேட்டு, "அது கொக்கு போல் இருக்கும்" என்று கதை சொல்ல, "கொக்கு எப்படி இருக்கும்?" என்று குருடன் கேட்க, அதற்கு அவன் கையை வளைத்துக் காட்ட, அதைத் தடவிப்பார்த்த குருடன் "இப்படிப் பட்டது தொண்டைக்குள் போனால் பிழைக்கவா பிழைக்கும்" என்று சொன்னதுபோலப் பாகிஸ்தானை இதற்குக் காரணம் காட்டுகிறார்கள். வெள்ளைக்காரர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்து இந்திய தேசிய ஒற்றுமை என்று பேசப்பட்டது இல்லை என்று என்னைப்போன்றவர்கள் சொன்னால் கனம் நிதி அமைச்சர் நம்பமாட்டார். நிதி அமைச்சர் அவர்களால் நல்லவர்கள் என்று ஏற்றுக்கொள்ளக்கூடிய சிலருடைய கருத்துக்களிலிருந்து ஆதாரங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

**"At the time of shaking off of the British yoke. there was a natural passion for emphasising the oneness of India. It was good and necessary, but perhaps the North is rather overdoing is today.**

**As I see it, India having obtained her freedom from Western domination is now beginning to feel the re-awakening of her many different areas. This is really a healthy sign of redawning self-expression and the Centre would do well to humble its pride and remember that this is only the beginning of the redawning which unless accepted as a natural pphenomenon and handled sympathetically will end in breaking up the very unty aimed at.**

**To go from the North right down to the South of India is like entering another World."**

இதைச் சொன்னவர்கள் காந்தியாருடைய பிரதம சிஷ்யராக இருந்துவந்த மீரா பென் ஆகும். அவருக்குக் கூடவா திராவிடப் பித்துப் பிடித்து விடும்? அவர்கள் நாட்டைச் சுற்றிப் பார்த்தார்கள். சுய ராஜ்யத்திற்குப் பிறகு பத்து ஆண்டுகளுக்குப் பிறகு — மக்களுடைய சுய உணர்ச்சியைப் பார்த்தால் புதிதான மன எழுச்சி பெற்றிருக்கிறார்கள்—தன்னைத் தான் அறிந்துகொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல "Unity without willing co-operation between the groups and the Central power is worse than open separation" என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்களாகப் பிரிந்து போகலாம் என்று சொன்னால் குற்றம் சாட்டுகிறார்கள். இருந்துகொண்டிருக்க வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் நடந்துகொண்ட முறை என்ன? நம்மைத் தள்ளிவிடுங்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் உலகத்திற்கே வழி காட்டும் அளவுக்கு நாம் பண்போடு நடந்துகொண்டு வந்திருக்கிறோம்.

அஸ்ஸாம், வங்காளத்திலே நடந்த மொழிப் போராட்டத்தைப் பற்றி நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை ஒரு ஆதாரமாக வைத்துக் கொண்டே ஒற்றுமை மனப்பான்மையைப் பெறமுடியவில்லை என்று சொல்வது அவ்வளவு தெளிவான கருத்தல்ல. அவர்களுக்கு ... முடியவில்லை யென்றால், நமக்கும் அவர்களுக்கும் ... ஆண்டுக்காலமாகப் பண்பாட்டிலே வெவ்வேறு ஆதாரங்கள் காணப்படுகின்றன. அந்த ஆதாரத்தை இன்றைய தினம் நடைமுறை அளவுக்குக் கொண்டுவந்து தேசிய ஒற்றுமைப்பாடுக்கு ஆதாரமாகக் காட்டுவது நல்ல அடிப்படையில் அல்ல, தாகூர் பல அரிய கவிதைகள் பாடியிருக்கிறார். அதேபோல் தேசியக் கவிஞராகிய பாரதியார் மிகச் சிறந்த கவிதைகளை நாட்டுக்கு இயற்றிக் கொடுத்திருக்கிறார். இவைகளைத் தவிர வேறு ஏதாவது நல்ல காத்துக்களையோ, கவிதைகளையோ எழுதி வைத்திருக்கிறீர்களா? இன்றைக்கு அவர்களைக் காட்டிலும் மேலான கவிதைகள் இயற்றக்கூடியவர்கள் இனித் தோன்றப் போகிறார்களா? அப்படிப்பட்டவர்கள் யாரையேனும் நீங்கள் ஒளித்து வைத்திருக்கிறீர்களா? பண்டித ஜவஹர்லால் நேருவைக் காட்டிலும் நாட்டை நல்ல முறையில் இறுக்கிப் பிடிக்கக்கூடிய தலைவர்கள் யாரையேனும் இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அப்படி ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லை. பண்டித ஜவஹர்லால் நேரு முயற்சி செய்தால் நாட்டைப் பிரிககாமல் இறுக்கி வைத்திருக்கமுடியும். ஆனால் அவரே ஓரளவுக்கு நாட்டின் ஒற்றுமைக்காகவும், தர்மத்திற்காகவும் அனாவசியமான கிளர்ச்சி நாட்டிலே கூடாது என்பதற்காகவும் எல்லாவற்றையும் காட்டிலும் இயற்கைக்கு ஒவ்வாத முறையில் நடந்து கொள்வது நியதி அல்ல என்ற முறையில் நடந்து கொண்டு வருகிறார். இயற்கையான வரலாற்றுக்குமுன் இறுக்கிப் பிடிப்பதென்பது முடியாத காரியம். ஆகவே தான, இனியும் இறுக்கி வைத்துப் பிடிப்பதில் அவர் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. அந்த அடிப்படையில்தான் அவ்வப்பொழுது, அந்தந்த இனத்துக்கு ஒரு தனி அரசு அமைத்துக் கொடுத்துகொண்டுவருகிறார். ஆகவே அந்த முறையில் இதைக கவனித்து ஆராய்ந்து பார்த்தால் ஒரு நல்ல முடிவைக் காண முடியும். 'இந்தியன் யூனியன்' அமைந்து இருக்கிறதென்று சொல்லப்படுகின்றது. இந்த இந்தியன் யூனியன் காமன்வெல்த்தில் ஒரு நாடாக இருப்பதுபோல், பல நாடுகள் பிரிக்கப்பட்ட பின்னரும்கூட, காமன்வெல்த்திலே எப்படிப் பல நாடுகள் அங்கம் வகித்துக்கொண்டு வருகிறதோ அதைப்போல நம் நாட்டிலும் ஆங்காங்கு தனி அரசுகள் ஏற்பட்ட பிறகும் காமன்வெல்த்திலே அங்கம் வகிக்கக்கூடிய நாடுகளாக அவைகளும் திகழலாம். அப்படி ஒவ்வொன்றும் ஒரு உறுப்பினராகச் சேர்ந்து உலகம் பூராவும் ஒன்று என்று நினைக்கக்கூடிய வகையிலே சேர்ந்து கொள்ளலாம். ஆகவே பிரிந்து போகிறோம் என்று யாரும் கருதத் தேவையில்லை. நம்முடைய உரிமையை நாம் கேட்கிறோம். அதுவும் வரலாற்றின் அடிப்படையிலே, பண்பாட்டின் அடிப்படையிலே கேட்கிறோம். எங்களால் முடிந்தால பெறுகிறோம். இல்லையென்றால் இந்த முயற்சியில் தோல்வி கண்டு படிந்து போகிறோம். ஆனால், நாங்கள் படிந்து போனாலும் இந்த உணர்ச்சி மட்டும் என்றைக்கும் மடிந்துவிடாது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெளிவாக, திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகறேன. நீங்கள் இதன் உண்மையை உணராத காரணத்தால்தான் இவ்வளவு தூரம் சொல்லவேண்டியிருக்கிறது. இதற்காக ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். இரண்டு நாடுகள் ஒன்றாக இணைந்து நல்ல முறையிலே ஆட்சி நடைபெற முடியுமா என்பதை சமீபத்திலே நடைபெற்ற சம்பவம் ஒன்றை எண்ணிப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். 1958லே எகிப்துக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய சிரியா என்ற நாடும் எகிப்தும் சேர்ந்து 'யுனைடெட் அரபுக் குடியரசு' — அதாவது ... ஐக்கிய தேசிய ...

என்ற வகையில் இணைந்து ஆட்சி புரிந்தது. அப்படி இரு நாடுகளும் ஒன்றாக இணைந்தபோது, நம் நாட்டுத் துணை ஜனாதிபதி அவர்களும், குடியரசுத் தலைவர் அவர்களும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பினர். பத்திரிகைகள் எல்லாம் தலையங்கங்கள் எழுதின. மூன்று ஆண்டுக் காலமாக சிரியா, எகிப்து ஆகிய நாடுகளிலே 'அராபிய தேசியம்' என்ற பெயரிலே ஆட்சி நடந்தது. ஆனால் சிரியாவில் எகிப்தின் ஆதிக்கம்தான் நடைபெற்று வந்ததால் நேற்றைய தினம் பிரித்துக்கொண்டார்கள். ஆகவே இரண்டு நாடுகள் ஒன்று சேர்ந்து ஆட்சி நடத்த முடியவில்லை என்பது இதிலிருந்து நமக்கு தெரிந்த விஷயம். ஆனால் உதாரணத்திற்கு, சேர்ந்தவர்கள் பிரிவதற்கும், பிரிந்தவர்கள் சேருவதற்கும் சொல்ல வேண்டுமென்றால் நிரம்ப இருக்கின்றன. ஆகவே இந்த உதாரணத்தைக் காட்டி, அதை மறுக்கவோ அல்லது அந்த உதாரணத்தைக் காட்டி இதை மறைக்கவோ செய்யலாம் என்று நினைத்தால் அது தவறான கருத்தாகும். அந்த ஆராய்ச்சிக்கு இப்போது நாம் இறங்கத் தேவையில்லை. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னபோது நேரு அவர்களின் குரல் என் காதில் கேட்பதுபோல் தொனித்தது. அதாவது "இனிப் பிரிவினை இல்லை" என்று அவர் சொன்னார். அப்படி அவர் சொன்னதிலிருந்து பார்க்கும்போது முன்பு ஏதோ ஒரு பிரிவினைக்கு வழி இருந்ததுபோலவும், அதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள் என்றும் ஊகிக்க முடிகிறது. எது எப்படியிருந்தாலும், என்றைக்காவது ஒரு நாள் சூழ்நிலை இவர்களை நிச்சயம் இணங்கவைக்கத்தான் போகின்றது. நாங்கள் அந்தச் சூழ்நிலையை உண்டாக்கிக்கொண்டு வருகிறோம். நேரம் வருகின்றகாலத்தில் அது தானாகவே பயனைக்கொடுக்கும். ஆனால் இன்றைக்கு இப்படி பேசிவிட்டு, இனிப்பிரிவினை கிடைக்காது என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. 'In this age of atomic bomb and the rapidly changing world, problems like that of Pakistan have no bearing and meaning.' நம்முடைய பண்டித நேரு அவர்கள் சொன்னதுதான் இது. 'அணுகுண்டு சகாப்தத்திலே அற்பத்தனமாகப் பகுதிகள் கேட்கிறார்கள்' என்று சொல்லி, அதற்குப் பதிலாக இதிலே எவ்வித பலரும் இல்லை; மீனிங்கும் இல்லை என்று சொல்லப்படுகிறது. அதாவது இதிலே எவ்விதப் பொருளும் அர்த்தமும் இல்லையென்று சொல்லப்பட்டது மட்டுமல்ல. கனம் நிதி அமைச்சர் அவர்கள் மதுரையிலே பேசுகையில் பண்டித நேருவை நேரில் வைத்துக் கொண்டு பேசியிருக்கிறார்கள். 'Americans who fought the Civil War to keep their Union together can appreciate how a proposal to divide the country is resented by vast numbers of the Indian people.' உள்நாட்டு யுத்தத்தை நடத்தியாகிலும் அமெரிக்கர் தங்களை, தங்கள் நாட்டைக் காப்பாற்றிக் கொண்டார்கள் என்பதை மட்டும் உணர்ந்துள்ளார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இங்கே மட்டும் ஒரு சிலரை அடக்கிவிட்டால் போதும்; மற்றவர்களைப் பற்றி எந்த விதமான கவலையும் இல்லை என்று நினைக்கிறார்கள். இப்படித்தான் பண்டித நேரு அவர்களும் முதலிலே பேசினார். ஆனால் கடைசியில் பாகிஸ்தான் பிரச்னை வலுவடைந்து, பாகிஸ்தான் தனியாகப் பிரிந்தது. இது பற்றிப்பிறகு நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒரு பதில் சொல்வார் என்று கருதுகிறேன். இதற்கு கனம் அமைச்சர் அவர்கள் ஒரு பதில் சொல்லக்கூடும். ஆனால் அது சரியல்ல. அதாவது வெள்ளைக்காரர்கள் இருந்தார்கள்; அது நடந்தது என்று சொல்லக்கூடிய ஒரே ஒரு பதிலைத்தான் அவர்கள் வைத்திருக்கக்கூடும். ஆனால் வெள்ளைக்காரர்கள் இருந்தார்கள். அதனால் கொடுத்துவிட்டோம் என்று சொல்வதைவிட நம்முடைய நண்பர் கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் சொன்னதுபோல் இவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்ற ஓர் எண்ணம் இருந்திருக்குமானால், இரத்தம் சிந்தியாவது இதைத் தடுத்திருக்க முடியும். ஆனால், அவர்களுடைய கொள்கை அது அல்ல என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். பாகிஸ்தான் பிரச்னை வலுவடைந்தவுடன், 'In this age of Atomic bomb, there is no place for Pakistan' என்ற அதே நேரு அவர்கள் ஒருதரம் 'The Congress position was that India should remain a National Unit. But at the same time if the population of a unit specifically declared that they would not be in the Common unit, then the Congress would not compel them to stay in the unit. Thus the Congress recognized the right of separation or self-determination.' என்று சொல்லியிருக்கிறார். நான் இந்த நேரு அவர்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் உள்நாட்டு யுத்தம் வந்தாலும் தடுத்துத் தீரவேண்டுமென்றார்கள். ஆனால் அப்படிப்பட்ட நேருவை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இப்போது நான் சொன்ன நேருவைத்தான் நம்புகிறேன். காலம்தான் வரவேண்டுமென்ற அருமையான கருத்தை பண்டித நேரு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்குள்ளவர்களோ, எங்கள் கட்சியிலே உள்ள முக்கியமான 10, 15 பேர்களை ஒழித்துக் கட்டிவிட்டால், பிரச்னை தீர்ந்தது என்று நினைக்கிறார்கள். இத்தகைய அடக்குமுறையைத்தான் செய்யவேண்டுமென்று இவர்கள் சொல்கிறார்கள். இந்தப் பிரச்னை, இந்த இலட்சியம் நாங்களாக எடுத்துக்கொண்டதல்ல; அல்லது உங்களைப் புண்படுத்தவேண்டுமென்றோ, விரோதித்துக் கொள்ள வேண்டுமென்றோ நாங்கள் ஏற்படுத்திக் கொண்டதல்ல. உங்களிடத்திலே நட்பாக இருக்க வேண்டும், நேசமாக இருக்கவேண்டுமென்ற நல்லெண்ணம் எங்களுக்கெல்லாம் இருக்கிறது. உங்களுடன் ஒத்துழைத்து உங்களுடைய நல்லெண்ணத்தையும், மகிழ்ச்சியையும் நாங்களும் பெறவேண்டுமென்றுதான் நினைக்கிறோம். இப்போது நான் பேசுகிற அத்தனை பேச்சுக்களையும் காங்கிரஸ் உறுப்பினர்கள் எவ்வளவு அருவருப்போடு கேட்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அதையும் நான் தாங்கிக்கொள்கிறேன். உங்களையெல்லாம் நான் மதிக்கிறேன்; அதைவிட மேலாக நான் எங்கள் உரிமையை மதிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

நிமிர்ந்து பார்த்தேன். திகைப்பு மேலிட்டது. என்னையறியாமல் எழுந்து நின்றேன். என் எதிரில்,

என் எதிரில். நின்ற அந்த ஆளை அந்தவேளை அங்குமட்டுமல்ல எங்குமே என்னால் பார்க்கமுடியும் என்று எதிர்பார்க்கவேயில்லை. என் எண்ணத்தின் வழி தோன்றுகின்ற உருவெளித்தோற்றமா நான் அங்கு காண்கின்ற அந்த உருவம் என்ற ஐயப்பாட்டோடு சிலையாக நின்றேன் நான். என் பேசாமைகண்டு அந்த ஆள் முகம் சுளிக்கவில்லை. என் உள்ளத்து நிலையை உள்ளபடி தெரிந்துகொண்டாற்போல் "என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்! நான் நானேதான். ஐயம் வேண்டாம்!" என்று சொன்னபோது எனக்குச் சற்றே ஐயம் அகன்றது. பேசுதற்கு வாய் திறந்தேன். வார்த்தையேதும் என் வாயிலிருந்து வெளிப்போந்துவிடுவதற்கு முன் திரும்பவும் ஒரு 'வணக்கம்' என் காதுகளில் வந்து மோதியது. உதடுகளை இறுக அழுத்திக்கொண்டு ஒலிவந்த பக்கம் நிமிர்ந்துபார்த்தேன் நான்.

இப்போது திகைப்போடு வியப்போடு, ஐயப்பாட்டோடுகூட ஏற்கனவே எந்த அச்சத்திற்கு நான் ஆட்பட்டுப் பெருந்தவிப்புக்குள்ளாகிக் கிடந்தேனோ, அந்த அச்சமும் வந்து என்னை நன்றாகக் கப்பிக்கொண்டுவிட்டது. ஆம், ஐயை! அந்தவேளை என் எதிரில் ஐயை! இல்லை, இல்லை!—அவள்தான் எதற்கும் துணிந்தவளாயிற்றே! என் எதிரில் எப்படி அவளாக இருக்கமுடியும்?—ஐயை எதிரில் நான்!

ஐயயோ, நான் அவளைப்பற்றிய உண்மைகளைக் கதையாக்கி எழுதிவிட்டமைக்காக வெகுண்டு, கனன்று என்னை இழித்துப் பழித்துப் பேசுவதற்கென வந்துவிட்ட அவள் அந்தவேளை பார்த்துத்தானா வரவேண்டும்! மூன்றாவது ஆள்—அதுவும் எந்த ஆளால் அந்தக் கதையை நான் எழுதினேனோ அந்த ஆள் என்னைக் காணவந்து நிற்கும் வேளை பார்த்துத்தானா அவள் இங்கே வரவேண்டும்! ஐயோ, வருகின்ற தொல்லை, யாரும் இல்லாத வேளை பார்த்துவந்து தொலைக்கப்படாதா! வாரி இறைக்கப்படவிருக்கும் தூற்றல் யாரும் காணாதவேளை பார்த்து வாரி இறைக்கப்படக்கூடாதா! விழுகின்ற பழிச்சொல் யாரும் இல்லாமல் தனித்திருக்கும் வேளைபார்த்து வந்து விழக்கூடாதா! இப்படி எண்ணியது என் உள்ளம். ஆமாம், சாமானியர் யாரும் எண்ணக்கூடிய எண்ணந்தானே அது! ஒருவன் வழியோடு நடந்துபோய்க்கொண்டிருக்கும்போது. திடீரென்று எங்கோ ஓரிடத்தில் அவன் சறுக்கி விழுந்துவிட நேர்ந்துவிட்டால். முதலில்—அவனுக்கு எத்துணைதான் வேதனைதாக்கக்கூடிய அடி ஏற்பட்டுவிட்டாலும் அந்த அடியையா கவனிக்கிறான்? இல்லை. இல்லை. யாராவது அவனைப் பார்க்கின்றார்களா என்று எடுத்த எடுப்பில் பார்த்துவிடுகிறானே. மனதைத் தேற்றிக்கொண்டுவிடுகிறானே தான் பட்டுவிட்ட அவமானத்தைப் பற்றி எண்ணுகிறான் 'சீ, தடுக்க முடியாத அவமானம், தவிர்க்கமுடியாத பழி! அதிலிருந்து தப்புவதற்கு வேறு வழி இல்லையே!' உரலுக்குள் தலையைக் கொடுத்தாகிவிட்டது உலக்கைக்கு அஞ்சி என்ன செய்யமுடியும்? ஆம். உலகிலுள்ள குற்றங்குறைகளையெல்லாம் கண்ணால் பார்த்து, கருத்திற்கிசைந்து, கதையாக்கிக் காட்டும் சீர்திருத்தச் செம்மல் நான் என்று [illegible] போடுவேன் என்று வீறுபேசிக்கொண்டு எழுதித் தள்ளிவிட்டால் மட்டும் போதுமா? அதன் பின் விளைவையும் ஏற்பதற்கு நிமிர்ந்துநிற்க வேண்டுமே! அதன் விரும்பாமையையும் தாங்கிக்கொள்ளச் சித்தமாக இருக்கவேண்டுமே! இதோ வரும்படி வாரிக்கட்டிக்கொள்!' என்று நெஞ்சொடுபேசி 'வருக! வருவது வருக! வரட்டும், வருவது வரட்டும்!' என்று நெஞ்சினை நிமிர்த்திக்கொண்டு நிற்க முனைந்தேன் நான். அப்படியே மெல்ல ஐயையின் முகத்தைப் பார்க்கவிரும்பினேன். பார்த்துத்தானே ஆகவேண்டும்—அவள் முகத்தில் இகழ்ந்துரையாடும் குறியும். நான் உள்ளதை உள்ளபடி சொல்லிவிட்டேனே என்ற ஆத்திர உணர்வும், எப்படி எள்ளும், கொள்ளும் வெடித்துக்கொண்டு கிடக்கின்றன என்பதை அறிந்துகொள்ள.

அதற்கு முன்னால் என்னைச் சந்திப்பதற்கென முதலில் வந்திருப்பவரை ஏறிட்டுப்பார்க்க நான் தவறவில்லை. அவர் நான் சொல்வதற்கு முன்னாலே எதிரிலிருந்த விசுப்பலகைமீது அமர்ந்திருந்தார். புன்னகை மலர்ந்த முகத்தினராக என்னைப்பார்த்துக்கொண்டிருந்தார். அவர் நிலை ஒருபுறம் என் உள்ளத் துணுக்கத்தை வளர்த்துவிட்டுக்கொண்டிருந்தது. பிறிதொருபுறமோ அந்த இக்கட்டான வேளையில் என்னை வியப்பில் ஆழ்த்தவும் செய்தது. ஐயை அங்கு நிற்கிறாள். அவள் வரவோ. அவள் அங்கு நிற்பதோ எந்த மாற்றத்தையும் அவரிடத்தில் அங்கே உண்டாக்கவில்லையே! முகச் சுளிப்போ. புன்னகை மாற்றமோ எழுந்து வெளியே சென்றுவிடுவதோ—எதுவும் நடைபெறவில்லையே என்ற வியப்புத்தான் அது.

கடைசியாக எல்லாப் படைகளையும் துணைக்கழைத்துக்கொண்டு, எல்லாத் துணிச்சலையும் ஒன்று கூட்டிக்கொண்டு நெஞ்சை நிமிர்த்தி முதுகை நிமிர்த்தி பிடரியை நிமிர்த்தி கழுத்தை நிமிர்த்தி, முகத்தை நிமிர்த்தி கண்ணை நிமிர்த்தி உடலையே நிமிர்த்தி ஐயையின் முகத்தைப் பார்த்தேன் நான்.

அடடே, இது வியப்புக்குமேல் வியப்பாக, விந்தைக்கெல்லாம் பெரு விந்தையாகச் சிந்தையின் கணக்கையெல்லாம் சிறுபொழுதில் இறக்கி வைக்கும் தன்மைபெற்றதாகவல்லவா இருக்கின்றது! ஐயையின் முகத்தில் எள்ளும். கொள்ளும் வெடிக்கவில்லையே! கைகுவித்துக் கொண்டல்லவா நிற்கிறான் அவன். திரும்பவும் ஒரு வணக்கமல்லவா சொல்கிறான்! இகழவந்தவனா இரண்டு வணக்கங்கள் கூறுகிறான்! அவன் செயல் உண்மைதானா? அல்லது—ஓ! கோ...கோ! அவனுக்கு முன்னே வந்து இங்கே குந்திக்கொண்டிருக்கும் இந்த ஆளை இப்போதுதான் கண்டுகொண்டிருப்பானோ! இந்த ஆள் முன்னால் அவன் என்னைத் தூற்றத் தொடங்கினால், அவன் நிலையை, அவன் போக்கைச் சந்தி சிரிக்கும் நிலையாகப் போக்காக அவன் ஆக்கிவிடுவான் என்று அஞ்சிவிட்டானோ! அதற்காகத் தன் முகக்குறியை மாற்றிக்கொண்டுவிட்டானோ! என்னை வணங்குவதுபோல் வணங்கிப் புன்னகையைக் காட்டி மெல்ல இவ்விடமிருந்து இப்போதைக்கு நழுவிவிடலாம் என்று எண்ணுகின்றானோ! பிறிதொருமுறை வந்து என்னை நன்றாக இழித்துப் பழித்துப் பேசிவிட்டுப் போகலாம் என்று தன் திட்டத்தை மாற்றிக்கொண்டுவிட்டானோ! ஆமாம், அப்படித்தான் இருக்கவேண்டும்! அடடே! அதோ பையிலிருந்து எதையோ எடுக்கிறானே! என்ன அது? ஓகோ, நான் எழுதிய கதை வெளிவந்த [illegible] இருக்கும்! அதையேன் இப்போது

எடுக்கிறாள்? ஒன்றுமே புரியவில்லையே எனக்கு! ஓ, பழைய காகிதங்களா அவை! ஏன் அந்தக் காகிதங்கள் இப்போது? "ஒரு மாதத்துக்கு முன் நீங்கள் எழுதியிருந்தகதையை நான் படித்தேன்." அடடே பேசுகின்றாளே! இதுவும் எதை அவள் பேசுவாள் என்று நான் எதிர்பார்க்கவில்லையோ அதையே பேசுகின்றாளே! சரிதான், எதற்கும் அஞ்சாதவள் ஆகிவிட்டாள் போலிருக்கிறது! மூன்றாவது ஆளோ, நாலாவது ஆளோ யார் இருந்தாலும் அவள் பொருட்படுத்தமாட்டாள் போலிருக்கிறது. எதற்கும் துணிந்துவிட்டாள் போலிருக்கிறது! ஆமாம், 'துணிந்தவர்களுக்குத் துக்கமில்லை' என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள்! என்ன இருந்தாலும் நியாயத்துக்கு முரணான காரியமும் செய்துவிட்டுத் துணிந்து நிற்பது என்பது உண்மையான துணிச்சலாக இருக்கமுடியாது' சரி, அஞ்ச வேண்டுவதற்கு அஞ்சாமை கொண்டு அடாவடித்தனமாக அவள் எதிர்க்க வந்து நிற்கும்போது நாம் ஏன் அஞ்சவேண்டாதகற்கு அஞ்சிக் கொண்டு நிற்கவேண்டும்! இனியும் அஞ்சினால் என்னைவிடக் கோழையொருவன் எங்குமே இருக்கமுடியாது! சொல்லட்டும் அவள் சொல்ல வேண்டியதையெல்லாம்! திட்டட்டும் அவள் வாய் வலிக்கும்வரை! முழங்கட்டும் அவள் குரல் ஓயுமட்டும்! பேதைப்பெண், என்னையா திட்டப்போகிறாள்! தான் செய்த குற்றத்தை உலகறியத் தானே எடுத்துச் சொல்லிக்கொள்ளப் போகிறாள்.

"உங்கள் கதை நூற்றுக்கு நூறு என்னைத்தான் குறிக்கிறது என்பது என் முடிவு. நீங்களும் அதை மறுக்கமாட்டீர்கள்! எல்லாக் கதைகளுக்கும் போலத்தான் உங்கள் கதைக்கு முன்னாலும், இந்தக் கதையில் வரும் பெயர்கள் கற்பனை. இந்தக் கதையில் வரும் நிகழ்ச்சிகள் கற்பனை. யாரையும் குறிப்பிடுவன அல்ல' என்று குறித்திருக்கின்றீர்கள். அதைப்பார்த்து நான் இது என்னைக் குறிக்கவில்லை என்று எனக்குள் முடிவுகட்டிக்கொண்டுவிட முடியாது. அப்படி நான் முடிவு கட்டிக்கொண்டால் என்னைப் போலும் ஒரு அறிவிலி உலகத்தில் எந்தப் பாங்கிலும் காணமுடியாது.

"நீங்கள்கூட அது என்னை வைத்துக்கொண்டு எழுதப்படவில்லை என்று சொல்ல முன்வரமாட்டீர்கள். வேண்டுமானால் நீங்கள் என்னைப் பற்றி இழித்துப் பேசவேண்டுமென்ற நோக்கத்தில் எழுதாமலிருக்கலாம்! மொத்தத்தில் சமுதாயத்தில் தலைதூக்கி நிற்கும் தீமைகள் மாய வேண்டும் என்ற பெரிய நோக்கத்தோடு, பரந்த மனப்பான்மையோடு —என் வரையில் நடந்ததாக நீங்கள் எண்ணியதை, எடுத்துக்கொண்டதை—இப்படிக் கதையாக்கியிருக்கலாம். அந்த மட்டும். அதாவது சமுதாயத் தீமையைப் போக்குவதற்கெனத் தாங்கள் எடுத்த எழுதுகோல் நல்லதொரு கதையைச் சமைப்பதற்கு நான் பயன்பட்டு நின்றுள்ளதற்காக மிகவும் மகிழ்கிறேன். ஆனால்..."

"ஆனால்?"

"இதோ இதைப் படித்துப்பாருங்கள்." அவள் கையிலிருந்த தாள்களை என்னிடம் நீட்டினாள். அவள் பேச்சிலே கடுமை இல்லாததைக் கண்டு நான் சற்றுத் தெம்பு பெற்றேன். எனினும் அவள் பேச்சும், போக்கும் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தின. அந்தக் குழப்பத்தோடு தாள்களை வாங்கினேன். அந்தத் தாள்கள் ஒரு பெரிய கதையின் கையெழுத்துப்படிகள்போல் தோன்றின. அந்தத் தாள்களில் உள்ளதை அந்தக்கணமே அறிந்து கொள்ளவேண்டுமென்று உள்ளம் துடித்தது.

அவ்வளவு நேரமும் நான் நின்று கொண்டிருந்தேன். அவளும் நின்று கொண்டிருந்தாள். அப்போதுதான் அதை நினைத்துக்கொண்டவன் போல் "உட்காருங்கள்!" என்று பக்கத்திலுள்ள நாற்காலியைச் சுட்டிக் காட்டினேன். அவளோ நான் சுட்டிக்காட்டிய நாற்காலியில் உட்காரவில்லை. அந்த மூன்றாவது ஆள் அமர்ந்திருந்த அதிக நீளமில்லாத விசுப்பலகையின் மற்றொரு கோடியில் அமர்ந்துகொண்டாள். எனக்கு அது பின்னும் வியப்பையளித்தது. அந்த வியப்பில் சற்று நேரம் எதுவுமே ஓடவில்லை. பிறகு அவள் கொடுத்த கத்தைத் தாள்களை ஒவ்வொன்றாகப் புரட்டத் தொடங்கினேன். அந்தத் தாள்கள்:

'என் அன்றாட வேலைகள்' என்று துவங்கின. ஆங்காங்கே மேல்மங்கலம் என்ற ஊர்ப்பெயரும், நாளும் குறிக்கப்பட்டிருந்தன. நாட்கள் தொடக்கத்தில் 1—8—1942-க்கு முற்பட்ட இரண்டு ஆண்டுகளாகவும், பிறகு 1947க்குப் பிற்பட்ட சில மாதங்களாகவும் எங்கும் குறிப்பிடப்பட்டிருந்தன. எல்லாவற்றையும் படிப்பதற்குப் பொழுது இல்லை. தேவையும் ஏற்படவில்லை. குறிப்பிட்ட, முக்கியமான சிலவற்றை மட்டும் படித்தேன். அவற்றை நீங்களும் படியுங்கள்.

இந்த அழகான ஊரின் பெயர் மேல்மங்கலம். இந்த ஊருக்குச் சாலைப்போக்குவரத்தே கிடையாது. நல்ல நடுப்பகல் வேளையில் இந்த ஊர்வந்து சேர்ந்தோம். வெயில் தன் முழு ஆற்றலையும் காட்டி அரசோச்சிக்கொண்டிருந்தாலும், இந்தக் கிராமத்துச் சூழ்நிலை அந்த வெம்மையை எதிர்த்து வெற்றிப் புன்னகை பூத்துக்கொண்டு நின்றது. எங்குபார்த்தாலும் பயன்தரும் மரங்கள், குளிர்தரும் மரங்கள். ஓரிடத்தில் சில வேப்பமரங்கள் கும்பலாக நின்றன. அந்தக் கும்பலுக்குச் சற்றுத்தள்ளி ஒரு சிறிய ஏரி. அந்த ஏரி நிரம்ப நீர் இருந்தது. "அந்த வேப்பமரக் கும்பலில் இந்த வேளை போய்த் தங்கியிருப்பதை விட வேறு இன்பத்தை உலகிலேயே காணமுடியாது" என்று கூறிக்கொண்டு என்னுடன் வந்திருந்த மூவரையும் அந்த இடத்துக்கு அழைத்துச் சென்றேன்.

"அடடா, அந்த வெயில் வேளையில் அந்தச் சூழல்தான் எத்துணை இனிய சூழலாக அமைந்திருந்தது. அதற்குமேலாக இயற்கையைத் தரமறிந்து, நிலையறிந்து பயன்படுத்திக்கொள்வதில் அனுபவிப்பதில் இந்தக் கிராம மக்கள்தான் எவ்வளவு ஆற்றல் பெற்றவர்களாக இருக்கிறார்கள்! வரிசையாக இரண்டு பாங்கில் உயர்ந்து, வளர்ந்து, செழித்து நிற்கும் வேப்பமரங்கள். அந்த இரண்டு பாங்கு வேப்பமரங்களின் நீண்டு விரிந்த கிளைகள் ஒன்றையொன்று தழுவிக்கொண்டு நின்றன. இயற்கை எனும் வான் கூரையின் அடியில் பின்னுமொரு இயற்கைக் கூரையாக அந்தக் கிளைகள் வானை மறைத்துநின்றன. வானிலிருந்து அவ்வேளை தாக்கிக் கொண்டிருந்த வெயிலின் சூட்டை அவை தாங்கிக்கொண்டிருந்தன. அருகிலிருந்த மலையிலிருந்து சிலுசிலுவென இழிந்து, இடையில் உள்ள ஏரிநீரில் தாழ்ந்து, அந்த மலையின் குளிர்ச்சியையும், ஏரியின் தண்புனலையும், அள்ளிக்கொண்டு வந்து அந்த வேப்பங்கிளைகளின் குளிர்ச்சிமீதும், அதன் அடியில் படுத்துக்கொண்டோ, அமர்ந்து

கொண்டோ, நின்றுகொண்டோ இருப்போர்மீதும் மெல்லிய இளங் காற்றுத் தன்னைத்தானே அள்ளித் தெளித்துக்கொண்டிருந்தது. இந்த இடத்தில்தான் அந்தச் சிற்றூர் மக்கள் இயற்கையை அனுபவிக்கும் தங்கள் ஆற்றலைச் சிறப்பாகக் காட்டிக்கொண்டிருந்தார்கள். அந்த மரத்தடியில் ஆங்காங்கே பெரிய பெரிய பலகைக்கற்கள் போடப் பட்டிருந்தன. என்னுடன் வந்த மற்ற மூவரும் அந்தப் பலகைக் கற்களின்மீது அப்படியே படுத்துக் கொண்டுவிட்டார்கள். நான் — எனக்கும் நடந்தகளைப்பு இருக்கத் தான் செய்தது — அந்தச் சூழலின் இயற்கை வனப்பை ஊன்றி, ஊன்றிப் பார்ப்பதிலேயே ஆசைமிகக் கொண்டு கவனத்தையெல்லாம் அவற்றின்மீது செலுத்தினேன். அப்பப்பா! இயற்கை தன் பேராளர் களைக்கொண்டு அங்கு நடத்திக் கொண்டிருந்த ஆட்சியின் மாட்சியே மாட்சி! தூய்மையெனும் செல்வப் பெண்ணுள் எங்கெங்கும் கொலு வீற்றிருந்தாள். எளிமையெனும் ஒளிமுகத்தாள் எங்கணும் நடனமாடிக்கொண்டு நின்ருள். அழகென்னும் பேரோவியக் காரியோ தன் மாபெரும் தூரிகை கொண்டு எண்ணமுடியாத வண்ணங்களையெல்லாம் குழைத்துக் குழைத்து நினைக்கவே முடியாத எழில் ஓவியங்களை எங்கணும் தீட்டிக்கொண்டிருந்தாள். "இந்த எழிலாட்சி, தூய்மையாட்சி என்னும் இயற்கையாட்சிக்கு முன் ஆங்கிலேயனின் ஆட்சியோ கிரேக்கரின் ஆட்சியோ—யார் ஆட்சி தான் வந்து என்ன செய்யமுடியும்" என்று என்னை யறியாமல் உரக்கச் சொல்லிக்கொண்டேன்போலும் நான்.

"நீங்களாகப் பேசிக்கிட்டு நிக்கிறீங்களே யார் கூடப் பேசறீங்க?" என்ற குரல் கேட்டுத்தான் பின்னல் திரும்பினேன். அங்கே, ஒரு பெரியவர் நின்றுகொண்டிருந்தார். வயது ஐம்பதைந்தை எட்டியிருக்கும். தலையில் பெரியதொரு முண்டாசு. இடுப்பு வேட்டி முழங்கால்களை மட்டும் மறைக்கும் அளவில். காலில் உயர்ந்த மிதியடிகள். அந்த மிதியடிகளும், கால்களும் புழுதி படிந்திருந்தன. அதாவது அவர் புழுதி நிறைந்த பகுதிகளில் நீண்டநேரம் நடமாடிக்கொண்டிருந்துவிட்டு அங்கு வந்துள்ளார். கையில் நெற்றிமட்டத் தடியொன்று. பழைய தமிழ் மன்னர்களை நினைவூட்டும் அடர்த்தியான நீண்ட மீசை. கண்களிலே கனிவு. உதட்டிலே கவடமற்ற குறுநகை. நான் 'வணக்கம்' என்று கைகூப்பினேன். அவர் புன்னகையை மலர்த்திக்கொண்டு, கையில் பிடித்திருந்த நெற்றிமட்டத் தடியையும் பற்றிக்கொண்டே கைகூப்பினர்.

"நீங்கள் எல்லாம் காந்திக் கட்சி ஆளுங்கபோலிருக்குது. என்ன, ரொம்பத் தொலைவு இப்படி?"

"நாங்க நாலு பேரும் இந்த ஊரிலேயே வந்து இருந்துவிடுவது என்ற நோக்கத்திலே வந்திருக்கிறோம். இந்த ஊரிலே இருந்துகொண்டு நிர்மாண வேலைகளிலே ஈடுபடப் போறோம்!"

"ஓ, அப்படியா, ரொம்ப சந்தோசம். இருங்க இருங்க. நீங்க நாலு பேரு இல்லே, நூறு பேரே வந்தாக் கூட தாங்குவதற்கு இந்த ஊர்க் காரர்களால் முடியும். சத்தி இருக்குது" என்று கூறிக்கொண்டு பக்கத்திலுள்ள பலகைக் கல்லில் உட்கார்ந்தார் அந்தப் பெரியவர். கைத்தடியை அந்தக் கல்லின் ஒரு ஓட்டில் சாய்த்து வைத்தார். என்னையும் உட்காரச்சொன்னர். நானும் அதே கல்லில் மற்ருெரு கோடியில் உட்கார்ந்தேன்.

பெரியவர் ஊர்ப்புறம் திரும்பி நோக்கினர். நானும் அப்புறம் என் பார்வையை ஓடவிட்டேன். அங்கே சிற்றிடைச் சிறுமியொருத்தி தலையில் பெரியதொரு குண்டானைச் சுமந்தவண்ணம் எங்களை நோக்கி வந்துகொண்டிருந்தாள். குண்டானிலிருப்பது என்ன, அதை எங்கே கொண்டுபோகிருள் அந்தச் சிறுமி என்பதையறிய நான் ஆவல்கொண்டேன்.

அந்தச் சிறுமியோ அந்தக் குண்டானோடு எங்களருகில்தான் வந்தாள். எனக்கும் அந்தப் பெரியவருக்கும் இடையில் அந்தக் குண்டானை வைத்தாள். அந்தக் குண்டானில் முக்காற்பகுதி மோர், நல்ல அருமையான, கெட்டியான மோர், பசு மோர். 'இது ஏன்?' என்று கேட்பதுபோல நான் பெரியவர் முகத்தைப் பார்த்தேன்.

"நீங்க ரொம்பத் தூரம் நடந்து களைச்சு வந்திருப்பீங்க. பொழுது உச்சி வேளையும் தாண்டிப்போகுது. இப்போதைக்கு மோரைக் குடிங்க..."

அந்தப் பெரியவரின் செய்கை எனக்கு வியப்பையளித்தது. தமிழ்ப் பெருங்குடியின் உபசரிக்கும் பெற்றி தான் என்னே, என்னே என்று என்னைநானே வாழ்த்திக்கொள்ளும் முறையில் எனக்குள் வியந்து கொண்டேன். எங்கள் பேச்சொலி கேட்டுப் படுத்திருந்த மூவரும் எழுந்தனர். எல்லாரும் மோர் பருகினேம். மோரா அது! ஆடையெடுத்த தயிரேதான். அன்று இரவுகூட எங்களுக்கு உணவு வேண்டுவதில்லைபோலிருந்தது.

அன்றுமாலையே நாங்கள் அங்கே தங்குவதற்கான குடிசில்கள்போடும் வேலையில் ஈடுபட்டோம். அந்த ஊரில் ஏறத்தாழ ஐம்பது வீடுகளிருக்கும். அந்த ஐம்பது வீட்டுக்காரரும் நாங்கள் அந்தக் குடிசில்களைப் போடுதற்கு ஒத்துழைப்பு நல்கினர்; —உடல் உழைப்பு, பொருளளிப்பு. அந்தக்குடிசில்களை வேயப் பயன்பட்ட ஓவ்வொரு பிடிக்கூலமும் ஒவ்வொரு வீட்டார் தந்தது. அதன் குறுக்கே போடப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் ஒவ்வொருவர் கொண்டுவந்தனர். குத்துக்கால் ஒருவர் கொண்டுவந்தார். மேல்வளை ஒருவர் கொண்டுவந்தார். ஆண்கள், பெண்கள் பெரியோர் இளைஞர் அத்தனைபேரும் அதிலே பங்கு பற்றினர். என்னே! இது போலும் ஒரு கூட்டு முறை இருக்க முடியுமா? உணர்ச்சி பூர்வமான கூட்டு முறை இருக்க முடியுமா? இந்தக் கூட்டு முறையும், ஒத்துழைப்பும் மேலும் பரந்த அளவிற் செயற்படுமானல் வெள்ளைக்காரனையென்ன—இந்த நாட்டை அடிமைப் படுத்த விரும்பும வேறு யாரைத் தான் ஓட்டிவிட முடியாது!

(தொடரும்)

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்... அலுவலகம் 15 இல்லம் ...118
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# மொழிப் பற்று

— துரை —

ஒருவன் தன்மொழிமீது பற்றுடையவனாக இருப்பதும் குற்றமா? குற்றமென்பவர்கள் தெளிவற்றவர்களாகும். எப்போது அவர்கள் விழிப்படையப்போகிறார்களோ! ஒவ்வொருவனுக்கும் தங்கள் மொழிமீது பற்று இருக்கவேண்டியது, மிகவும் இன்றியமையாததாகும். பற்று, வாயில மட்டும் இருந்தால் போதுமா? நெஞ்சிலும் இருக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக செயலில் இருக்கவேண்டும். தன் மொழிக்கு நேரும் பங்கத்தைச் சுவைத்துக்கொண்டு, பிறமொழி நுழைவுக்கு வக்கீல் வேலை பார்ப்பது, அற்பத்தனமும் படுமுட்டாள்தனமுமாகும். அத்தகையவர்கள் சமுதாயத்தால் தண்டிக்கப்படவேண்டியவர்களாகும். பேராசைகளுக்கு நெஞ்சங்களை ஒதுக்கிவிட்டு, அயல் மொழிக்குத் தரகர் வேலை பார்ப்பவர்களின்— மாயா உலகில் சஞ்சரிப்பவர்களின நடவடிக்கைகளைக் கண்காணித்து, தம் மொழிக்கு உண்மைத் தொண்டு செய்வது, மொழிப்பற்றாளர்களின் இப்போதைய தலையாய கடமையாகும்.

இங்கிலாந்திலிருந்து தம் நாடு திரும்பிய காந்தியடிகளுக்குப் பம்பாயில் ஒரு வரவேற்பு உபசாரம் நடத்தினார்கள். அக்கூட்டத்தைப்பற்றிக் காந்தியடிகள் கூறும்போது, 'திரு. ஜின்னா அவர்கள் ஆங்கிலத்தில் சுருக்கமாகவும் இனிமையாகவும் பேசினார். மற்றவர்களும் ஆங்கிலத்தில்தான் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். ஆனால் நான்மட்டும்படி வழக்கமாகக் குஜராத்தியிலே பதிலளித்துப் பேசியதோடு, குஜராத்தியிடம் எனக்குப் பற்று அதிகம் என்றும் விளக்கினேன்' என்று சொல்லியிருக்கிறார்.

ஒரு அயல்மொழியைக் கற்றுக்கொண்ட காரணத்தினால், தமது சொந்தமொழியைப்புறக்கணிப்பவர்களை இவ்வாறு நயமாகக் கண்டித்திருக்கிறார் காந்தியடிகள். பிறமொழியில் அரைகுறை அறிவு, ஏற்பட்டுவிட்டாலே, தமது மொழியின் மீது அப்படியொரு தனிப்பட்ட தாழ்வு மனப்பான்மை எப்படி உண்டாகிறது?

பத்திரிகை நிருபர் ஒருவர், காந்தியடிகளைச் சந்திக்கப் பம்பாய் விமான நிலையத்திற்கே ஓடினார். தென்னாப்பிரிக்காவில் புகழடைந்து திரும்பும் காந்தியடிகளை, முதலில் சந்தித்துக் கேள்விகேட்டது தாமாக இருக்கவேண்டுமென்பது, அந்த நிருபரின் எண்ணமாகும். அவ்வாறே காந்தியடிகளிடம் நெருங்கி ஆங்கிலத்தில் அவர் ஒரு கேள்வி கேட்டார். நிருபரின் கேள்விக்குப் பதிலளிக்காமல், ஆங்கிலத்தில் அவர் கேள்வி எழுப்பியதைக் காந்தியடிகள் நயமாகக் கூட அல்ல, வெளிப்படையாகவே கண்டித்திருக்கிறார். நிருபரிடம் காந்தியடிகள், 'ஐயா, உமது மொழி குஜராத்தி. என் மொழியும் அதுவே. அப்படியிருக்க நீர் ஏன் ஆங்கிலத்தில் கேள்விகேட்டீர்? நான் ஆப்பிரிக்கா சென்றதால் என் சொந்த மொழியை மறந்திருப்பேன் என்ற எண்ணமா?' என்று கேட்டார்.

தன் மொழி நினைவே இன்றி, அம்மொழியின் நன்மை தீமைகளில் பங்குகொள்ளவும் மனமின்றி, உண்டு உறங்கி வாழ்ந்துகொண்டிருப்பவர்களின் தலையில் காந்தியடிகள் இவ்வாறு குட்டுகிறாரா?

காந்தியடிகளின் வாழ்க்கையில் ஒரு மாறுதலை உண்டாக்கிய நூல், ரஸ்கின் எழுதிய 'கடையனுக்கும் கதிமோட்சம்' என்ற நூலாகும். இந்த உண்மையை அவரே தெரிவித்திருக்கிறார். அந்த நூலினைக் காந்தியடிகள் 'சர்வோதயம்' எனும் பெயரில், குஜராத்தி மொழியில் தானே மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார். அந்தக் 'கடையனுக்கும் கதிமோட்சம்' நூலினைக் காந்தியடிகள், 'இந்தி' மொழியில் ஏன் மொழிபெயர்த்து எழுதவில்லை? அம்மொழி அவருடைய சொந்த மொழி அல்ல என்பதே, அதற்கான தெளிந்த காரணமாகும்.

இங்கு குறிப்பிட்டிருக்கும் இம்மூன்று எடுத்துக்காட்டுகளிலிருந்து இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலைக்குப் பாடுபட்ட காந்தியடிகளுக்கு இருந்த மொழிப்பற்றினை, எவரும் தெளிவாக உணர்ந்துகொள்ளலாம். நம்மிடத்திலும் மொழிப்பற்றுள்ளவர்கள் உண்டு. பரந்த கண்ணோட்டக்காரர்களாய் மொழிப்பற்றைத் தெரிவிப்பவர்கள், ஏளனத்திற்காளாகும் படுமோசமான நிலைமையும் இங்கே உண்டு.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரை அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.